பக்கங்கள் 16 விலை ரூ.50

Registered as a Newspaper

புதன் பொய்கை

# உதயன்

சுடர் : 38
கதிர் : 137

புதன்கிழமை 12 ஏப்ரல் 2023 பங்குனி 29 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054




அரச காணி ஆக்கிரமிப்பு

## மதக்குழு ஒன்றுக்கெதிராக அச்சுவேலியில் மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 12
அரசுக்குச் சொந்தமான அச்சுவேலி நெசவாலை அமைக்கப்பட்டுள்ள காணியை அத்துமீறிக் கைப்பற்றி அடாவடித்தனம் புரிகின்றனர் என்று குற்றஞ்சாட்டி அச்சுவேலியில் மதக்குழு ஒன்றுக்கு எதிராக நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

»15

## நாணய நிதியத்துடன் அடுத்தகட்டப் பேச்சு!

அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 12
இலங்கையின் பொருளாதார மீட்சி தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.

»15

## பால்மாவின் விலை மேலும் குறையும்!

கொழும்பு, ஏப். 12
இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அடுத்த சில மாதங்களில் மேலும் குறைவடையும் என்று பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

»15

## இளைஞர் மர்மச் சாவு!

பொலிஸார் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், ஏப். 12
நீர்வேலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். சிவலிங்கம் துசாந்தன் (வயது - 35) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

»15

# தமிழர் தொன்மம் காக்க தொடர் போராட்டங்கள்!

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12
'தமிழர் தொன்மம் காப்போம். ஆதிசிவன் கோவில்களை மீட்போம். மரபுரிமைகளைப் பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

»15

மனநல சிகிச்சையிலிருந்து தப்பியவரால்

## குடும்பத்தலைவர் நேற்று கொடூரமாகக் கொலை!

மீசாலையில் பயங்கரம்

யாழ்ப்பாணம், ஏப். 12
கொடிகாமம், மீசாலை - புத்தூர் சந்திக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் குடும்பத்தலைவரொருவர் குத்தியும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டுள்ளார். தெல்லிப்பழை உளநல மருத்துவமனையின் நோயாளர் நலன்புரி சங்கத்தைச்

»15

## போலி உருத்திராட்சம்; மக்களே அவதானம்!

யாழ்., ஏப். 12
யாழ்ப்பாண நகர் மற்றும் நல்லூர் பகுதிகளில் அண்மைய நாள்களாக உருத்திராட்சப் பழங்கள் என்ற பெயரில்

»15



## மின் தாக்கியதில் இளைஞன் சாவு!

வவுனியா, ஏப். 12
யானைக்காக அமைக்கப்பட்ட மின்வேலியில் சிக்குண்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

»15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொருளாதாரத்தை மீட்பதற்கு புதிய திட்டங்கள் நடைமுறை!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



**கொழும்பு, ஏப். 12**

**நாட்டில் உறுதியான பொருளாதாரத்தை நான்கு வருடங்களுக்குள் கட்டியெழுப்புவதற்கு அவசியமான புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து பங்களிக்கவேண்டும். இதுதொடர்பில் புத்தாண்டின் பின் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், அதிகாரசபை மற்றும் ஆணைக்குழுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களை ஒன்றிணைத்து கலந்துரையாடல் நடைபெறும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

நுவரெலியா நகர அபிவிருத்தி தொடர்பில் நுவரெலியா மாவட்ட செயலக அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பமுடியாது என்று பலர் கூறியபோதும் சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் செய்து கொண்ட ஒப்பந்தம் வாயிலாக அதை முறியடித்துச் சாதித்துள்ளோம். இந்தப் புத்தாண்டின் பின் நாட்டுக்கு அவசியமான புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும். வருடம் முழுவதும் சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை அதிகரித்துக் கொள்வதற்கான கண்கவர் நாடாக அபிவிருத்தி செய்யவேண்டும்.

சுற்றுலாத்துறையின் தேவைப்பாடுகளை அறிந்துகொண்டு புதிய திட்டங்களை வகுக்க வேண்டும். உயர்கட்டடங்களுக்கு மாறாக ஓய்வெடுக்கக்கூடிய வகையிலான ரம்மியமான சூழலுடன் அபிவிருத்தித் திட்டங்களை தயாரிக்கவேண்டும். இதனால் சுற்றுலாப் பிரயாணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படும். முதலீட்டாளர்கள் மற்றும் வேறு தரப்பினருக்கு அவசியமான வகையில் நுவரெலியா மாவட்டத்தை சீரழிப்பதற்கு இடமளிக்க முடியாது.

நாட்டுக்கு அவசியமான புதிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்குஅனைவரும் ஒருங்கிணைந்து செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். 2025 ஆம் ஆண்டு இலக்கு வைத்துள்ள அபிவிருத்தித் திட்டத்தில் வெற்றியீட்டுவதற்கு அனைத்துத் தரப்பினரின் பங்களிப்பையும் பெறுவதே எமது எதிர்பார்ப்பாகும் - என்றார்.

(ச-இ)



## மரபுச்சின்னமான சுமைதாங்கியை மோதித் தகர்த்த எரிபொருள் பவுஸர்

சாவகச்சேரி, ஏப். 12

நுணாவில் ஏ-9 பிரதான வீதியில், தொல்பொருள் திணைக்களத்தால் மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்ட சுமைதாங்கி மீது எரிபொருள் பவுஸர் மோதி விபத்துக்குள்ளாகியது.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நுணாவில் ஏ-9 பிரதான வீதியில் சுமைதாங்கி, இளைப்பாறும் மடம், குடிநீர்க்கிணறு என்பன காணப்படுகின்றன. அவை தொல்பொருள் திணைக்களத்தால் மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. நேற்று நடந்த விபத்தின் போது மரபுச்சின்னமான சுமைதாங்கி முற்றாக அழிவடைந்துள்ளது.

விபத்தில் நொருங்கிய சுமைதாங்கியின் கற்களை நுணாவிலில் வசிக்கின்ற தனிநபர் ஒருவர் உழவு இயந்திரத்தின் மூலம் அள்ளிச் சென்றுள்ளார் என்றும் விபத்தை ஏற்படுத்திய வாகனம் அப்பகுதியில் இருந்து பொலிஸாரால் அகற்றப்படுவதற்கு முன்னரே பொலிஸார், பொதுமக்கள் முன்னிலையில் கற்களை தனிநபர் எடுத்துச்சென்றுள்ளார் என்றும் அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி நகரசபைக்கு உடனே தெரியப்படுத்தியும் சம்பந்தப்பட்ட எவரும் சம்பவ இடத்துக்கு வரவில்லை அப்பகுதி இளைஞர்கள் முன்னாள் நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர் மூலமாக தொல்பொருள் திணைக்களத்துக்கு தகவலைத் தெரியப்படுத்த, திணைக்கள அதிகாரிகள் அங்கு விரைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (எ-14,20)



## அகற்றப்படாதிருக்கும் ஆபத்தான மரக்கிளை

### பொதுமக்கள் கடும் விசனம்

வவுனியா, ஏப். 12

சூறாவளியால் முறிந்து ஆபத்தான நிலையில் காணப்படும் மரக்கிளை 20 நாள்கள் கடந்துள்ள போதும் இன்னமும் அகற்றப்படவில்லை. இதனால் உயிரிழப்புக்கள் கூட ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வவுனியாவில் கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதி மினிசூறாவளியுடன் கூடிய கடும் மழை ஏற்பட்டு பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன் பெரிய மரங்களும் முறிந்து விழுந்தன. வவுனியா மாவட்டச்செயலக வாயிலில் அமைந்துள்ள மரத்தின் பெரிய கிளை ஒன்று மின்சார இணைப்பின் மீது முறிந்து விழுந்தது. சூறாவளி ஏற்பட்டு 20 நாள்கள் கடக்கின்ற நிலையிலும் இதுவரை மரக்கிளை அகற்றப்படவில்லை.

பொதுமக்களின் நடைபாதையாகவும், வவுனியா மாவட்டச் செயலகம், வவுனியா பொது மருத்துவமனை ஆகியன காணப்படுவதால் அதிகமான பொதுமக்கள் பயன்படுத்தும் ஒரு பகுதியாகவும் இந்த வீதி காணப்படுகின்றது. மரக்கிளை மின்சார இணைப்பின் மீது விழுந்துள்ளமையால் இணைப்பு அறுந்து விழும் நிலையிலும் காணப்படுகின்றது.

மாவட்டச்செயலகத்துக்கு அருகிலிருந்தும், அந்தப் பகுதியை தினமும் பயன்படுத்தி வரும் மாவட்டச் செயலரின் கண்களில் மரக்கிளை முறிந்து விழுந்துள்ளது தென்படவில்லையா? மரக்கிளை முறிந்து உயிரிழப்பு ஏற்பட்ட பின்னரா அதை அகற்றுவீர்கள்? அசம்பாவிதங்கள் ஏற்படுவதற்கு முன்னர் மரக்கிளையை உடனடியாக அகற்ற வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர். (எ-14,110)

## இந்திய முட்டைகளை விநியோகிக்க அனுமதி

இந்தியாவிலிருந்து இரண்டாவது கட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை விநியோகிப்பதற்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. இறக்குமதி செய்யப்பட்டுள்ள முட்டைகள் இலங்கை சுங்கத்தினூடாக பல்நோக்கு வணிக கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது கட்டமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ள முட்டைகளின் மாதிரிகள் தற்போது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்று கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், கலாநிதி ஹேமாலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

விநியோக அனுமதி வழங்கப்பட்டுள்ள 10 இலட்சம் முட்டைகள் பண்டிகைக் காலப் பயன்பாட்டுக்காக பேக்கரிகள் மற்றும் ஹோட்டல்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன என்று பல்நோக்கு வணிக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. இதற்கு முன்னர் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 20 இலட்சம் முட்டைகளை ஹோட்டல்கள் மற்றும் பேக்கரிகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை நிறைவுபெற்றுள்ளது என பல்நோக்கு வணிக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார். (எ-14,இ)

## போதைப்பொருள் நுகர நாளொன்றுக்கு ரூ.80,000!


கொழும்பு, ஏப். 12

திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அவர் போதைப்பொருளை கொள்வனவு செய்வதற்காக நாளொன்றுக்கு 80 ஆயிரம் ரூபாவை செலவிட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மொறட்டுவ பகுதியில் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட 32 வயதான சந்தேகநபரிடமிருந்து 6 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், பொருள்களை திருடி அவற்றை விற்று அந்தப் பணத்தில் போதைப்பொருளை கொள்வனவு செய்ததும், அதற்காக நாளொன்றுக்கு 80 ஆயிரம் ரூபா செலவிட்டுள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது. (ச-6)

## பொதுவேட்பாளராக பஸில்; இதுவரை தீர்மானமில்லை

### மொட்டுக் கட்சி உறுப்பினர் சுட்டிக்காட்டு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச மீண்டும் நாடாளுமன்றம் வருவது தொடர்பில் கட்சிக்குள் கலந்துரையாடல் இடம்பெறவில்லை என மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இரட்டைக் குடியுரிமையைத் துறந்து பஸில் ராஜபக்ச மீண்டும் நாடாளுமன்றம் வரவுள்ளார் எனவும் அதற்காக தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதவி விலகுவார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான கலந்துரையாடல்கள் எவையும் கட்சிக்குள் இடம்பெறவில்லை. கட்சி தொடர்பில் சிந்தித்தே பஸில் ராஜபக்ச முடிவெடுப்பார். கட்சிக்காகவே அவர் நிதியமைச்சுப் பதவியைக் கூட இழந்தார். ஆயினும் அடுத்த பொதுத்தேர்தலில் பஸில் ராஜபக்ச ஜனாதிபதிவேட்பாளராக களமிறங்குவதால் எவ்வித தவறு ஏதுமில்லை- என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க இராணுவத்தளம் இலங்கையில் உருவாகுமா?

## அமெ. தூதுவர் விளக்கம்



**கொழும்பு, ஏப். 12**

**இலங்கையில் இராணுவத் தளம் அமைக்கும் எண்ணம் எமது நாட்டுக்கு இல்லை என அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.**

ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அமெரிக்காவின் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரியின் இலங்கைப் பயணம் தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த அவர், இராணுவத் தளத்தை இலங்கையில் அமைக்கும் எண்ணம் எமக்கு இல்லை என மீளவும் வலியுறுத்துகிறேன். சோஃபா ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கவோ அல்லது மீள மதிப்பீடு செய்யவோ எமது நாட்டுக்கு எண்ணம் இல்லை. இந்தோ - பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான முதன்மை துணைப் பாதுகாப்புச் செயலர் தலைமையிலான உயர்மட்ட அமெரிக்க பாதுகாப்புக் குழு இந்த ஆண்டு பெப்ரவரியில் இலங்கைக்கு வந்திருந்தது. கடல்சார் கள விழிப்புணர்வு விடயங்கள் தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்காக இந்தக் குழு வந்தது. அது இலங்கையில் இராணுவத் தளத்தை அமைக்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்கும் என்ற ஊகத்தைத் தூண்டியுள்ளது என்று தெரிவித்துள்ளார். (ச-இ)

### உள்ளூராட்சி நிறுவனங்களின்

## எல்லை நிர்ணயக் குழு அறிக்கை கையளிப்பு

கொழும்பு, ஏப்.12

உள்ளூராட்சி நிறுவனங்களின் எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை பிரமர் தினேஷ் குணவர்த்தனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவால் பிரதமர் அலுவலகத்தில் நேற்றுக் காலை கையளிக்கப்பட்டது என்று பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களின் எல்லை நிர்ணயக் குழு கடந்த வருடம் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் நியமிக்கப்பட்டது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய உட்பட நால்வர் இந்தக் குழுவில் அடங்குகின்றனர். உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8 ஆயிரத்திலிருந்து 4 ஆயிரமாகக் குறைக்கும் நோக்கில் இந்தக் குழு நியமிக்கப்பட்டது. (எ-இ)

## எரிபொருள் கொள்வனவில் இன்னமும் சிக்கல் நிலையே

*நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப்.12

நாட்டுக்குப் போதுமான எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் இன்னமும் சிக்கலான நிலைமையே உள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கைக்கு எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு மாதாந்தம் 450 மில்லியன் டொலர் தேவையாகவுள்ளது. நாட்டில் இன்னமும் அந்நியச் செலாவணிப் பிரச்சினை தீராத நிலையில், இந்த நிதியைப் பெற்றுக்கொள்வது பெரும் சிரமமாகவே இருக்கின்றது. அதனாலேயே நாட்டுக்கு எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்ள 3 வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அந்த நிறுவனங்கள் தங்கள் வியாபாரத்தை விரிவாக்குவதற்காக எரிபொருள் விலையைக் குறைத்து விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது- என்றார். (எ-இ)

## 'பனாமா' கப்பலில் தப்ப முயன்ற யாழ்ப்பாண இளைஞர்கள் கைது!

கொழும்பு, ஏப். 12

பனாமா நாட்டுக்குச் சொந்தமான கப்பல் ஒன்றில் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்ற நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த இந்தக் கப்பலுக்குள் நுழைந்து தப்பிச் செல்ல முயன்றவேளை குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், வேலணை, தொண்டைமானாறு, புதுக்குடியிருப்பு மற்றும் அராலி வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நால்வரே கைதாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டநடவடிக்கைகளுக்காக அவர்கள் துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)







மழைவிட்டும் தூவானம் விடாத கதையா, இப்போதைக்கு அச்சுவேலிப் போதகர் கும்பலை பிடிச்ச கெடுகாலம் விலகாது போல. நேற்றும் சிவசேனைக்காரர் தலைமையில அங்கத்தச் சனம் ஆர்ப்பாட்டத்தில இறங்கிட்டுது. ஏற்கனவே 'அடாத்தாப் பிடிச்ச நெசவாலைச் சபையை' சிவசேனை அழிக்கப்போகுதெண்டு போதகர் தரப்பு சொல்ல, ரண்டுமூண்டு பொலிஸ்காரரை பாதுகாப்புக்கு போட்டிருக்கு. இப்ப ஆர்ப்பாட்டம் எண்ட பழையபடி கையில கமெரா போனோடயும், பதியிற பைலோடயும் பொலிஸ்காரர் அங்க வந்து குந்திட்டினம். போராட்டத்துக்கு வந்தவையை ஒருபக்கம் பொலிஸ்காரர் பதிஞ்சு படமெடுக்க, இன்னொரு பக்கம் அந்தச் சபைக்குள்ள இருந்து ரண்டுமூண்டு பெடி பெட்டையள் உள்ளுக்க ஒளிச்சிருந்து போனில படமெடுத்திருக்கினம். அந்த சபையில இருந்த போதகரும் குடும்பமும் மறியலுக்க இருக்கேக்க, இப்ப இருக்கிற பெடி, பெட்டையள் ஆரெண்ட கேள்வி உங்களுக்கு வரலாம்.

வழக்கமா அந்தச் சபையில ஆராதனை நடக்காட்டியும் கூட, மீன், இறைச்சி, குடி, கும்மாளம் எண்டு எல்லாம் நடக்குமாம். அதால இளந்தாரி ஆம்பிளையள், பொம்பிளையள் கொஞ்சப்பேர் அங்கேயே நிண்டு போறவையாம். சபைக்கு வாற இளம் ஆக்களுக்கு முதலில ஜெபிக்கிறதுக்காக அங்க போதகர் நிக்கச் சொல்லுவாராம். அப்பிடி நிக்கிற நாளில ஜெபிச்சு முடிஞ்சதும், போதகர் 'மந்திரத்தண்ணி' போத்திலையும், பொரியல் கரியலையும் எடுத்து மேசையில வைப்பாராம். பிறகென்ன, விடிய விடிய பைட்ஸ்உம், பைலாவும் தான். ஆரும் என்ன, ஏது எண்டு கேட்டால், 'ஜெபிக்கேக்க அப்பிடித்தான் சத்தம் கேக்கும், காதைப் பொத்திக் கொண்டு போங்கோ எண்டு சொல்லுப்படுமாம். அதைமாதிரி பொம்பிளைப் பிள்ளையளையும் அங்க தங்க வைச்சு, ஏற்கனவே தங்கி நிக்கிற பெடிப் பிள்ளையளோட ஒரு 'கனெக்சனை' உண்டாக்கிறதிலையும் போதகர் கெட்டிக்காரர். இப்பிடி ருசிப்பட்டுத்தான் அங்க பெடி,பெட்டையள் வீட்டையும் போகாமல் தங்கி நிக்கிறவையாம். அப்பிடி தங்கி நிண்டவைதான் நேற்றைய போராட்டத்தை போனில படமெடுத்தவை எண்டு அங்கத்தைச் சனம் பட்சிக்கு சொல்லிச்சினம்.

இப்பிடி அடாத்தா அரசகாணிக்குள்ள கட்டடமெல்லாம் எழுப்பி, நடப்புக்காட்டுற போதகர் கும்பலை அங்க இருந்து எழுப்ப ஏலாத பொலிஸ்காரர், நேற்று அந்தக் காணிக்குள்ள இருந்து சபைக்காரர் வெளியில போகோனும் எண்டு நடத்தின போராட்டத்துக்கு ஒரு கொட்டகையை அந்தச் சபைக்கு முன்னால அடிச்சு இருக்கிறதுக்கு சம்மதிக்கேலை. பிறகு அங்கத்தை ஊர்க்காரர் ஒருத்தரின்ர தனிப்பட்ட காணிக்கதான்(சபைக்கு முன்னால இருக்கிற காணிக்குள்ள),

ஒரு பந்தல் போட்டு, போராட்டக்காரர் இருந்தவை. 'இவங்களை நெடுக இப்பிடி அக்கிரமங்களும், சீரழிவும் செய்யவிடேலாது. இதுதான் கடைசிக்கட்டம். இந்த முறை கட்டாயம் உந்தச் சபைக்கு ஒரு பாடம் படிப்பிக்காமல் விடமாட்டம்' எண்டு அங்க நிண்ட எல்லாரும் கொதிச்சுப் பேரய் நிண்டிச்சினம். ஆனாலும் இந்தப் பிரச்சினையை ஒருமதப் பிரச்சினையா ஆக்காமல், ஒரு தனிப்பட்ட கும்பலுக்கு எதிரான பிரச்சினையாத்தான் அங்கத்தைச் சனம் பாக்கினம். 'வேற சபைகளும், சேர்ச்சுகளும் இஞ்ச இருக்கு. ஆனால் அதுக்குரிய ஆக்கள் இப்பிடி கேடுகெட்ட வேலை ஒண்டும் செய்யிறேலை. அவை மாதிரி இவையும் இருந்தால் ஏன் சனம் இந்தக் கும்பலை எதிர்க்கப் போகுது?' எண்டு அங்க நிண்ட ஒருத்தர் கேட்டார். அவர் கேட்டதிலையும் நியாயம் இருக்குத்தானே?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முள்ளியவளை கலைமகள் வித்தியாலய அதிபர் வெற்றிடம்

# நேர்முகத்தேர்வு இடம்பெற்றும் அதிபரை நியமிக்காதது ஏன்?

### மாணவர்களின் பெற்றோர் கேள்வி

**முல்லைத்தீவு, ஏப். 12**

**முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கீழுள்ள முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தின் அதிபர் பதவி வெற்றிடத்துக்கான நேர்முகத்தேர்வு இடம்பெற்றும் ஏன் அதிபர் நியமிக்கப்படவில்லை என்று பாடசாலை மாணவர்களின் பெற்றோர் கேள்வியெழுப்பியுள்ளனர்.**

இது தொடர்பில் பாடசாலை மாணவர்களின் பெற்றோர் தெரிவித்துள்ளதாவது:- முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் அதிபராக இருந்தவர் 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி ஓய்வுபெற்றார். பாடசாலையில் ஏற்பட்ட அதிபர் பதவி வெற்றிடத்துக்கு 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14ஆம் திகதி விண்ணப்பங்கள் கோரப்பட்டன. விண்ணப்பத்தில் அதிபர் தரம் II ஐ கொண்டிருத்தல் வேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது. 5 அதிபர்கள் விண்ணப் பித்திருந்த போதும் இரண்டு அதிபர் களே நேர்முகதேர்வில் கலந்து கொண்டனர். அதில் ஒருவர் அதிபர் தரம் II ஐ கொண்டிருந் தார். நேர்முகத் தேர்வு நடைபெற்றபோதும் இதுவரை பாடசாலைக்கு அதிபர் நியமிக்கப் படவில்லை. 650 வரையான மாணவர்களையும் 45 வரையான ஆசிரியர்களையும் கொண்டு தரம் II வரை இயங்கிவரும் இந்தப் பாடசாலையின் நிர்வாகத்தை திறம்பட நடத்துவதற்கு அதிபர் கட்டாயம் தேவை. எனினும் கடந்த மூன்று மாதங்களாக பாடசாலைக்கான அதிபர் முல்லைத்தீவு கல்வி வலயத்தால் நியமிக்கப்படவில்லை. ஏற்கனவே விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முகத்தேர்வு நடத்தப்பட்ட பின்னர், மீண்டும் அதிபர் வெற்றிடத்துக்கான விண்ணப்பம் முல்லைத்தீவு வலயத்தால் கோரப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள வலயங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வலயத்துக்குள் பணியாற்றும் அதிபர் தரம் 2 ஐக் கொண்ட அதிபர் விண்ணப்பித்தும் வலயம் இதுவரை அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. வலயத்தின் இவ்வாறான நடவடிக்கை விசனத்தை ஏற்படுத்துகின்றது. இவற்றை சீர்செய்து துரிதகதியில் கலைமகள் வித்தியாலயத்துக்கான அதிபரை நியமிக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றோம்- என்றனர். (எ-14,19)

## வருடப்பிறப்பு வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஏப். 12

வண்ணை சாந்தையர்மடம் கற்பக விநாயகர் கோயிலில் வருடப்பிறப்பு வழிபாடுகள், நாளைமறுதினம் வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் நடைபெறவுள்ளன. பிற்பகல் 1.30 மணிக்கு படிக் கட்டபிஷேகமும், பிற்பகல் 2.03 மணிக்கு சோபகிருது வருடப்பிறப்பு விசேட பூசையும், அதனைத் தொடர்ந்து கைவிசேடம் வழங்கல், அர்ச்சனைகள் என்பன இடம் பெறவுள்ளன. மாலை 5 மணிக்கு உருத்திராபிஷேகமும் மாலை 6 மணிக்கு உள்வீதி உற்சவ நிகழ்வும் நடைபெறவுள்ளன. அத்துடன் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் மருத்து நீர் வழங்கப்படும் என்றும் ஆலய தர்மபரி பாலன சபையினர் அறிவித்துள்ளனர். (எ-14)



நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் திருமஞ்ச திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (எ-14)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.12

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் தலைமையில் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (ய)

## புத்தாண்டில் கொண்டாட்டம்: எதிர்த்து கதவடைப்புப் போர்

### சமுர்த்தி தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 12

நாடளாவிய ரீதியிலுள்ள சமுர்த்தி வங்கிகளில் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை நடத்த, சமுர்த்தி நிதியத்தின் 8 கோடியே 5 லட்சம் ரூபாவை செலவிட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் தீர்மானம் எடுத்துள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 15ஆம் திகதி கதவடைப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என சமுர்த்தி தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

இதுதொடர்பில் அதன் தேசிய அமைப்பாளர் தெரிவித்ததாவது:தற்போதைய பொருளாதார இக்கட்டான சூழ்நிலையில் சமுர்த்தி நிதியத்திலிருந்து 8 கோடியே 5 லட்சம் ரூபாவை புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்குச் செலவிட சமுர்த்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதைவிடுத்து இவ்வாறு சமுர்த்தி நிதியை பகட்டு நடவடிக்கைக்கு பயன்படுத்து கின்றமை உகந்த செயற்பாடல்ல.

அத்துடன் சமுர்த்தித் திணைக்களத்தில் பதவியுயர்வு பெற்று ஏறக்குறைய 28 வருடங்களாக பணிபுரியும் அனைத்து துறை ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய உரிமைகளை அரசாங்கம் தவிர்த்து வருகின்றது. இத்தகைய செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதோடு இதற்கெதிராக எதிர்வரும் 15ஆம் திகதி சமுர்த்தி வங்கிகளை மூடி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளோம்- என்றார். (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆனாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், சமாளித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த செய்தி கிடைக்கும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.எதிர்பார்த்த காரியம் தாமதமாகும். வீண் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில் வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டு.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். மனதில் துணிச்சலுடன் முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவு களும் ஏற்படக் கூடும். ஒத்துழைப்புதருவார். மகிழ்ச்சி தரும் தகவல் கிடைக்கும்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் சாதகமாக முடிந்துவிடும். எதிர் பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். அதேபோல் செலவுகளிலும் சற்று கவனம் செலுத்துவது நல்லது. தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்ய வேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சட்டியில் இருந்து அடுப்புக்கு....!

**நா**ட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான திட்டங்களை நிறைவேற்றுவதைவிடவும், எப்படி மக்களையும் நாட்டையும் பொருளாதார நெருக்கடி தொடர்பான சிந்தனையில் இருந்து திசைதிருப்பலாம் என்பது பற்றியே ரணில் அரசாங்கம் அதிகம் சிந்திக்கின்றது. அதனால்தான் நாளொரு குழப்பமும் பொழுதொரு பிரச்சினையுமாக இந்த நாட்டு மக்கள் நெருக்கடிமேல் நெருக்கடியாகச் சந்தித்துக் கொண்டேயிருக்கிறார்கள். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் ரணில் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட அத்தகையதொரு செயற்கைக் குழப்பங்களில் ஒன்றே.

இலங்கையின் சாபக்கேடான இனப்பிரச்சினையை, மனச்சாட்சியில்லாமல் தான் நினைத்தபடி, அடக்குவதற்காக பேரின வாத அரசால் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழினத்தின் மீதே முதலில் பாய்ந்தது. வகை தொகையில்லாமல் தமிழ்மக்கள், கேட்டுக்கேள்வியில்லாமல் இந்தப் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் சிறைகளில் அடைக்கப்பட்டார்கள். எந்தவித விசாரணைகளுமின்றி, காலவரையறையில்லாமல் அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களைத் தடுத்து வைக்கவும், சித்திரவதை செய்யவும் பயங்கரவாதத் தடைச் சட்டம் வழியமைத்தது. அப்போதெல்லாம் இந்தப் பயங்கரவாதத்தடைச்சட்டம் குறித்து முஸ்லிம்களோ, சிங்களவர்களோ பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. ஆனால், போர் முடிவுறுத்தப் பட்டுச் சிலகாலங்களின் பின்னர், இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் விளைவை முஸ்லிம்களும், சிங்களவர்களும் அனுபவிக்கத் தொடங்கினார்கள். ஈஸ்டர் குண்டுவெடிப்பின் பின்னர் முஸ்லிம்களும், 'அரகலய' காலிமுகத்திடல் போராட்டத்தின் பின்னர் சிங்கள இளையோரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் வேட்டையாடப்பட்டபோதே, அதன் கொடூரம் அவர்களுக்குப் புரிந்தது. அதைத் தொடர்ந்து அந்தச் சட்டத்துக்கு எதிரான குரல்கள் பலமடையத் தொடங்கின.

கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு தமிழ்மக்கள் போராடியபோது அது குறித்து அக்கறைப்படுத்தாமல் இருந்த சர்வதேசமும், இலங்கை அரசாங்கமும், பின்னர் சிங்கள மக்கள் தரப்பில் இருந்து அதேகோரிக்கை வந்தபோது, உடனடியாக அந்தச் சட்டத்தை இல்லாதாக்கும் காரியங்களில் பரபரவென இறங்கின. உண்மையில், சர்வதேச அழுத்தம் காரணமாகத்தான் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மாற்ற முற்பட்டதே தவிர, இதயசுத்தியுடன் அதற்கான வேலைகளை முன்னெடுக்கவில்லை. அதனால்தான், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு, அதைவிடவும் அதிபயங்கரமான இன்னொரு சட்டத்தை கொண்டுவரும் தந்திரத்தை அரசாங்கம் கையில் எடுத்தது. அதன் விளைவே, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம். இப்போது வரைவு நிலையில் இருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை என்ன தடை வந்தாலும் நிறைவேற்றியே தீருவது என்று அரசாங்கம் ஒற்றைக்காலில் நிற்கின்றது. முதலில் பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக ஒழிக்கப்படுமென மக்கள் நினைத்திருக்க, இப்போது சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்ததைப் போல நிலைமை ஆகிவிட்டது.


புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், நீதிபதிகளுக்குரிய சில அதிகாரங்களைக்கூட பொலிஸாருக்குத் தாரை வார்க்க வழிசெய்கிறது. அத்துடன் அரசுக்கு எதிராகச் செய்திகள் வெளியிட்டாலோ, கருத்துக்கூறினாலோ கூட அவர்களைக் கைது செய்யும் அதிகாரத்தையும் இந்தச் சட்டம் தாராளமாக வழங்கு கின்றது. அதைவிட இத்தகைய செய்திகளைத் தாங்கிய பத்திரிகைகள் வெளியிடுதல், விற்பனை செய்தல், அரசுக்கு எதிரான செய்திகள் வெளிவந்த பழைய பத்திரிகைகளில் பொருள்களைச் சுற்றிக் கொடுத்தல் என்பனகூட இந்தச் சட்டத்தில் பயங்கரவாதச் செயலாகக் கருதப்பட்டு, கைது செய்யப்படுவதற்கான ஏதுநிலையை உண்டாக்கியுள்ளது. கருத்துச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் என்பவற்றோடு, பழைய பேப்பரில் பொருள்களைச் சுற்றிக்கொடுக்கும் கடைக்காரர்களின் விற்பனை உரிமையும் , அதை வாங்கும் நுகர்வோரின் உரிமையும் கூட இல்லாமற்போகும் நிலையை புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் உண்டாக்கவுள்ளது. எனவே இந்தப் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது அரசுக்கு எதிரான எவரையும் எப்போதும் கைது செய்வதற்கான வசதியையும், அடக்குமுறைக்கான மேலதிக அதிகாரங்களையுமே அள்ளிக் கொடுத்துள்ளது. இப்போது எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பால் இந்தச் சட்டவரைவை அரசாங்கம் தள்ளிப்போட்டாலும், அதை எப்படியும் நிறைவேற்றிச் சட்டமாக்கவே முயலும். அப்படி நடந்துவிட்டால், இலங்கை காலம் முழுதும் இருளுக்குள்ளேயே முடங்க வேண்டியதுதான். மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றக் கதிரைகளை அலங்கரிப்போர் – இந்தச்சட்டத்தை அமுலாக்கவிடாமல் – தம் மனச்சாட்சிப்படி நடக்க முன்வருவார்களா?



### நாளொரு நல்வார்த்தை

"ஒரு கதவு மூடப்பட்டால் அதை விடச் சிறந்த வழி ஏதோ ஒன்று இருக்கிறது என்பதை எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்"

– புத்தர்




# கடன் மறுசீரமைப்பை விரைவாக்க இலங்கைக்கு அமெரிக்கா அழுத்தம்

**கொழும்பு, ஏப். 12**

**கடன் மறுசீரமைப்புகளை இலங்கை அரசாங்கம் விரைந்து பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜனெட் யெலென் அழுத்தங்களை வழங்கவுள்ளார் என்று தெரியவருகின்றது.**

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவை இந்த வாரம் உலக நாடுகளைச் சேர்ந்த சகாக்களை சந்திக்கவுள்ளது. இந்தச் சந்திப்பில் ஒட்டுமொத்த கடன் நிவாரணத்துக்கான உறுதியான நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என அமெரிக்காவின் திறைசேரி செயலாளர் ஜனெட் யெலென் வலியுறுத்தவுள்ளார்.

இலங்கை, சாம்பியா கானா ஆகிய நாடுகள் ஏற்கனவே தங்கள் கடன்களைச் செலுத்த முடியாத வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. கடன் வழங்குநர்களுடன் தொடர்ந்தும் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவருகின்றன. குறைந்த வருமான நாடுகளில் 60 வீதமானவை கடன்நெருக்கடியில் சிக்குண்டுள்ளன. இலங்கை நடுத்தர வருமானம் கொண்ட நாடு என்பதால் வேறு கடன் திட்டத்தை முன்னெடுக்கின்றது. இலங்கை அரசாங்கம் விரைந்து கடன்மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தப்படவுள்ளது என அமெரிக்க திறைசேரியின் உதவிச்செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# அரசுடன் இணைகின்ற எண்ணம் எமக்கில்லை

## உதய கம்மன்பில சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப். 12

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினர் எவரும் அரசாங்கத்துடன் இணையப்போதில்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் கடந்த ஒருவருட காலமாக எவ்வித பேச்சுக்களிலும் நாம் ஈடுபடவில்லை. இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில நேற்று முன்தினம் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் ஒன்றிணைந்து அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொள்ளவுள்ளோம். அதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் பேச்சுக்களில் ஈடுபடுகிறோம் என பொய்யான தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் எனக்கும் கடந்த ஒரு வருடகாலமாக எவ்வித பேச்சுக்களும் கிடையாது. தன்னிச்சையான முறையில் செயற்பட்டதன் விளைவை பொதுஜன பெரமுன தற்போது அனுபவிக்கிறது. பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் தரப்பினர் எவரும் அரசாங்கத்துடன் இணையப்போவதில்லை - என்றார். (ச-இ)

**நாளை** 13.04.2023 **வியாழக்கிழமை பங்குனி 30**

சுபநேரம் : 07.36 - 09.06

ராகுகாலம் : 01.36 - 03.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 12
இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் சமூக விஞ்ஞானத்தில் உயர் சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் தரம் ஒன்பதை பூர்த்தி செய்தவராகவும் இருந்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை https://ou.ac.lk/advcsose எனும் இணையத்தள முகவரியில் சென்று எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும்.
பரீட்சார்த்தியின் கல்வித்த கைமையைப் பொறுத்து ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் கற்கைநெறியைத் தொடரமுடியும். இந்தக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்பவர்கள் திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டப் படிப்புக்களையும் தொடர முடியும். யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியூடாகவும் 0212223374 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-14)

# சர்வதேசத்தின் அபிமானத்தை புதிய சட்டம் பெறுதல் அவசியம்

## அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஏப். 12**
**இலங்கை அரசாங்கத்தால் கொண்டுவரப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் சர்வதேச தராதரங்களை பூர்த்தி செய்யவேண்டும். மக்களின் தேவைகளை உண்மையில் நிவர்த்தி செய்ய வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது: காலாவதியாகிய சட்டமான பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் முன்மொழியப்பட்டு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றியமைத்து அதை நீக்கப்போகும் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வரவேற்கின்றோம்.
இந்தச் சட்டத்தை மீளாய்வுக்கு உட்படுத்தும் போது அனைத்து தரப்பினருடனும் வலுவான நேர்மையான கலந்தாலோசனைகள் இடம்பெறவேண்டும். இல்லையெனில் மிகப்பெரும் தாக்கத்தை இந்தச் சட்டம் ஏற்படுத்தும்.
இலங்கை தற்போது முக்கியமான தருணத்தில் உள்ளது. ஆகவே அரசாங்கம் பல்வேறு தரப்பட்டோரின் கருத்துக்களை செவிமடுப்பதற்கு நேரத்தைச் செலவிடவேண்டும். முன்மொழியப்பட்ட புதிய சட்டம் சர்வதேச தராதரங்களை பூர்த்தி செய்வதாகவும் இலங்கை மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதாகவும் அமைய வேண்டும் - என்றார். (ச-இ)

### யாழ். பாரம்பரிய உணவுத்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப். 12
யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் நடத்தும் 'யாழ் பாரம்பரிய உணவுத்திருவிழா 2023' எதிர்வரும் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், பண்ணை சுற்றுவட்டத்தில் நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாண மக்களிடையே அருகிவரும் பாரம்பரிய உணவுப்பழக்கத்தை மேம்படுத்தி ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கவும், உணவுத்துறை முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களைச் சந்தைக்கு அறிமுகப்படுத்தி, அவற்றுக்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் வகையிலும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மக்கள் அனைவரும் நிகழ்வில் பங்குபற்றி பாரம்பரிய உணவுவகைகளைப் பெற்றுப் பயனடைய வேண்டும் என்று யாழ். மாவட்டச்செயலர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார். (எ-14)

### வியாபார நிலையங்களில் நேற்றுத் திடீர் சோதனை!

யாழ்ப்பாணம், ஏப்.12
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் யாழ்ப்பாணத்தில் உள்ள பல வியாபார நிலையங்களில் நேற்று செவ்வாய்க்கிழமை திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.



வியாபாரிகள் பயன்படுத்தும் நிறுத்தல் கருவிகள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைகளத்தால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நடப்பாண்டில் முத்திரை பதிக்கப்படாத நிறுத்தல் கருவிகளைப் பயன்படுத்திய 15 வியாபார நிலையங்கள் இனங்காணப்பட்டு, அந்த 15 வியாபார நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
எதிர்காலத்திலும் நிறுவை அல்லது அளவை உபகரணங்களைப் பயன்படுத்தும் வியாபார நிலையங்களிலும் திடீர் சோதனை முன்னெடுக்கப்படும் என திணைக்களம் அறிவித்துள்ளது. (எ-14,26)

### குளிர்பானம் அருந்தக் கொடுத்து வயோதிபப் பெண்ணிடம் திருட்டு!

மன்னார், ஏப்.12
குளிர்பானம் அருந்தக் கொடுத்து வயோதிபப் பெண்ணின் சங்கிலி திருடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் மன்னார் இலுப்பைக் கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கள்ளியடிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை நடந்துள்ளது.
கடந்த 5 ஆம்திகதி புதன்கிழமை ஒரு மோட்டர் சைக்கிளில் இனந்தெரியாத இரு நபர்கள். கள்ளியடி பகுதியில் வசிக்கும் வயோதிப தம்பதியின் வீடொன்றுக்குச் சென்று அங்கிருந்த காணியில் பனை மட்டைகளை வெட்டுவதற்கு அனுமதி கோரியுள்ளனர். மறுநாள் வந்து வெட்டுங்கள் என்று அந்தத் தம்பதி அனுமதி வழங்கியுள்ளனர்.
மறுநாள் வியாழக்கிழமை அந்த நபர்கள் மீண்டும் அங்கு சென்று பனை மட்டைகள் வெட்டுவதற்கு கத்தி தாருங்கள் எனக் கேட்டுள்ளனர்.
கணவர் மன்னாருக்குச் சென்றிருந்தமையால் முதியபெண் அவர்களை இடைநிறுத்தி, வீட்டினுள்ளே சென்று கதவைப் பூட்டி விட்டு யன்னல் ஊடாக கத்தியையும் அவர்கள் சாப்பிடுவதற்கு தோசையும் வழங்கினார். அப்போது அவர்கள் பதிலுக்கு குளிர்பானம் ஒன்றை அவருக்கு கொடுத்துள்ளனர். பின்னர் முதிய பெண்ணின் கணவரும் வீட்டுக்கு வந்தநிலையில், அந்த நபர்கள் வழங்கிய பானத்தை இருவரும் குடித்துள்ளனர். அதன்பின்னர் இருவரும் மயக்கமடைந்த நிலையில் பெண்ணின் கழுத்திலிருந்த இரண்டரைப் பவுண் சங்கிலியை அந்த நபர்கள் திருடிச் சென்றுள்ளனர்.
முதியவர் இருவரும் வாயில் நுரைதள்ளிய நிலையில் மயக்கமடைந்திருந்த நிலையில், மறுநாள் வெள்ளிக்கிழமை வயோதிபப் பெண்ணுக்கு சற்று மயக்கம் தெளிந்துள்ளது. அவரது பிள்ளைகளுக்கு அலைபேசி மூலம் தகவலைத் தெரிவித்தார். பிள்ளைகள் பெற்றோரை மன்னார் மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை இலுப்பைக்கடவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-14, 213)

### சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப்.12
சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிவஸ்ரீ. பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 1 சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாக தம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. சொற்பொழிவை இளம் சைவப்புலவர் ச. நவநீதன் "வாளால் மகவரிந்தூட்ட வல்லே வள்ளல்" என்னும் தலைப்பில் ஆற்றவுள்ளார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். (ய)

# வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

வவுனியா, ஏப். 12
வவுனியாவிலுள்ள வர்த்தக நிலையங்களில் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையில் 4 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று வவுனியா மாவட்ட நிறுவை, அளவைப் பிரிவின் உதவி அத்தியட்சகர் எஸ்.இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அமைச்சின் உத்தரவுக்கமைய வவுனியா வர்த்தக நிலையங்களில் நேற்று செவ்வாய்க்கிழமை திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
வவுனியா இலுப்பையடி, சந்தை உள்வட்ட வீதி, கண்டி வீதி, பழைய பேருந்து நிலையம், நெளுக்குளம், பசார் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள 78 வர்த்தக நிலையங்கள் மீது திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
வவுனியாவில் உள்ள தேநீர் விற்பனை நிலையங்கள், காய்கறி சிற்றி மற்றும் தனியார் பல்பொருள்




விற்பனை நிலையங்கள், மரக்கறி விற்பனை நிலையங்கள் என்பவற்றில் விசேட சோதனை நடத்தப்பட்டது. நிறுத்தல் தராசுகள் முத்திரையிடப்பட்டுள்ளதா, நிறுத்தல் அளவைகள் சரியாக உள்ளனவா, பொதி செய்யப்பட்ட பொருள்களின் நிறுத்தல், அளவைகள் சரியானவையா என்பது தொடர்பாக சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.
அவற்றை முறையாக செய்யாத 4 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-14,18,110)

### குடமுழுக்கு விழா

யாழ்ப்பாணம், ஏப்.12
சண்டிலிப்பாய் ஆலங்குழாய் முருகன் மூர்த்தி கோவிலில் அமைக்கப்பெற்ற பஞ்சதள ராஜகோபுரம் கும்பாபிஷேக விஞ்ஞாபனம் இன்று புதன்கிழமை முற்பகல் 11.17 மணி தொடக்கம் 12 மணி வரையுள்ள சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினரால் தெரிவிக்கப்பட்டது. (ய - 63)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முனைவர். தி. கமலநாதனின் ‘சிந்தனை, சொல், செயல்’ நூல் அறிமுகம்




கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அண்மையிலே எழுதிய ‘சிந்தனை, சொல், செயல்’ என்ற நூலைப் படிக்கும் வாய்ப்புக்கிடைத்தது. கமலநாதன், அமரர் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் அன்புக்குரிய மாணவன். பேராசிரியர் சு. வித்தியானந்தன் பற்றி அவர் "பேசாத நாளெல்லாம் பிறவாநாளே" என வாழ்பவர். வித்தியானந்தனின் குடும்பத்தினருடன் இன்றும் உறவைப் பேணிவருபவர். பேராசிரியர் சு.வித்தியானந்தனின் ஆளுமையை அவருக்கு அருகில் இருந்து கண்டவன் நான். வித்தியானந்தனின் ஆளுமை பல்வேறு வகையிலே கமலநாதனிடம் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. குறிப்பாக நிர்வாகத்திறன், சிறியோரையும் மதித்து நடக்கும் பாங்கு, எந்த இடர்வரினும் எடுத்த காரியத்தைத் துணிந்து சாதிக்கும் இயல்பு இவையெல்லாம் பேராசிரியர் வித்தியானந்தன் அவருக்கு வழங்கிய ‘நன்கொடை’ என்றே எண்ணுகிறேன். இந்தநூலை வாசிக்கும் பொழுது பேராசிரியர் வித்தியானந்தனே என் நெஞ்சத் திரையில் நிழலாடினார்.

தமிழ்ச்சூழலிலே ஒப்பீட்டளவிலே நோக்கும் பொழுது சுயசரிதை நூல்கள் மிகக்குறைவு. அதிலும் ஈழ நாட்டிலே இன்னும் குறைவு. நாம் அறிந்த வரையிலே முதன் முதலாக தனது வாழ்க்கை வரலாற்றை உரைநடையிலே எழுதியவர் எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை தான். அவருக்கு பின் பலர் எழுதியுள்ளனர். சுயசரிதை என்பதை தன் வரலாறு என்று இன்று கூறுகின்றார்கள். ஒருவர் தன் வரலாற்றைக் கூறுவதனூடு தான் வாழ்ந்த காலத்து அரசியல், சமூகம், பண்பாடு, பொருளியல், கலை, இலக்கியம் முதலானவற்றைப் பதிவுசெய்து விடுவர். அதனாலே தான் இன்று வாழ்க்கை ‘வரலாற்று இலக்கியம்’ என்ற ஒரு பகுப்பை ஆய்வாளர்கள் பகுத்து ஆராய்ந்து வருகின்றனர்.

கமலநாதனின் இந்தநூல் சுயசரிதை அல்ல. எனினும் நூலாசிரியரின் சொந்த வாழ்க்கைச் சம்பவங்களையும் சொல்வதனால் ஒருவகையில் சுயசரிதையாகவும் அமைந்துள்ளது. உ. வே. சாமிநாதயரின் ‘என்சரித்திரம்’ எனும் நூல் தமிழ் நூல் பதிப்பு வரலாற்றை அறிய உதவுவது போல ஈழத்து குறிப்பாக யாழ்ப்பாணத்து கல்வி வரலாற்றையும் அவ்வரலாற்றுப் பின்னணியிலே யாழ்ப்பாணம் கல்வியற் கல்லூரி உருவாகி வளர்ந்தமையையும் அதிலே கலாநிதி கமலநாதனின் வகிபாகத்தையும் இந்நூல் பதிவுசெய்துள்ளது. ‘நன்றுக்கும் ஒன்றுபடா’ நமது சமூகச்செல்நெறியை மிக நாசூக்காக இந்நூல் பதிவு செய்துள்ளது.

‘சிந்தனை, சொல், செயல்’ என்ற இந்த நூல் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இருபத்திரண்டாவது அகவைச் சுவடாக வெளிவந்திருக்கின்றது. ஈழத்துப் புலமை ஆளுமைகளின் உச்சமாகத் திகழ்ந்தவர்களில் ஒருவரான பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பிக்கு இந்நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. எனது ஆசானும் எனது ஊராருமான பேராசிரியர் கார்த்திகேசு சிவதம்பிக்கு இந்நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டமை எனக்குப் பேருவகை தந்தது.

ஏழு தலைப்பில் அமையும் வாழ்த்தியல் எனும் பகுதியைத் தொடர்ந்து கடந்து சென்றால் பத்துத் தலைப்புக்களிலே ‘சிந்தனை, சொல், செயல்’ பயணிப்பதைக் கண்டு கொள்ளலாம். இவை கால்கோள் எனத் தொடங்கி எழுகோலச் சிற்பிகள் என நிறைவு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவற்றைப் படிக்கும்போது இளமையிலே நான் இரசித்த சினிமாப் பட வசனங்கள் என் நினைவுக்கு வந்தன. இப்போதைய வாசகர்கள் அறிய வேண்டும் என்பதற்காக என் நினைவுக்கு வரும் சில வசனங்களைக் குறிப்பிடுகிறேன்.

"நான் கடந்து வந்த காட்டாறுகள் எத்தனை என்று கணக்கிட முடியுமா? பாட்டொலிக்கும் குயில்கள் இல்லை. என் பாதையில் படமெடுத்தாடும் பாம்புகள் நெளிந்தன. தென்றலைத் தாண்டியதில்லை தீயைத் தீண்டி இருக்கிறேன்.

யாழ்ப்பாண தேசத்திலே ஒரு பெரிய நல்ல காரியத்தைத் திறம்படச் செய்து முடித்தவன் ஓய்வாக இருக்கும்போது இத் திரைப்பட வசனத்தை ஒருகணம் உச்சரித்துப் பார்ப்பான் என்பது வாஸ்தவம். கலாநிதி கமலநாதன் இதற்கு விதிவிலக்காக முடியாது. இன்றைய நிலையில் இருந்து கல்வியியற் கல்லூரியை நோக்குபவர்களுக்கு அதிற் பயில்பவர்களுக்கு இந்நூலில் இடம்பெறும் விடயங்களிற் பெரும்பாலனவை தெரியவர நியாயமில்லை. அவர்கள் அதை அறிந்துகொள்ள விரும்புகிறார்களோ என்பது எமக்குத் தெரியாது.

"தொலைபேசியைப் பயன்படுத்தும் எவரும் அதனைக் கண்டுபிடித்துத் தந்தவனை ஒருபோதும் நினைப்பதில்லையே" என்று எங்கோ வாசித்த நினைவு கல்வியியற் கல்லூரிக்கும் பொருந்தும் என்று எண்ணுகின்றேன்.

கலாநிதி. கமலநாதனின் கடின உழைப்பு, விடா முயற்சி, அர்ப்பணிப்பு, ஆளுமை முதலானவை இந்தக் கல்வியியற் கல்லூரி நிறுவப்படுவதில் எந்தளவுக்குச் செயற்பட்டன என்பதை இந்த நூலை வாசிப்போர் உணர்ந்துகொள்வர். இந்தக் கல்லூரியை நிறுவுவதற்கு அவர் பட்ட கஷ்டங்களையும் அவருக்கு உதவியாயிருந்த ஒரு சிலரையும் எனக்கு ஓரளவுக்குத் தெரியும். உதவி செய்தவர்களை நன்றியுணர்வோடு குறிப்பிடும் நூலாசிரியர் உபத்திரவம் கொடுத்தோரைப் பெயர் சுட்டாது சொல்லிச் செல்வது அவரது நயத்தக்க நாகரீகத்தைப் புலப்படுத்துகின்றது. "அளவானவர்கள் அந்தத் தலைப்பாகையை" அணிந்து கொள்ளலாம் என்று விட்டு விட்டார் போலும்.

இந்த நூலை வாசிக்கும் பொழுது ஒரு நாவலை வாசிப்பது போல இருந்தது. தொடர்ந்து வாசித்து முடிக்க வேண்டுமென்ற ஆவலை அவரது மொழி நடையும், சம்பவங்களை ஒழுங்குபடுத்திப் பகுத்து வகுத்துக் கூறும் பாங்கும் தந்தன. ஏதோ ஒரு வகையிலே அடியேனும் ஒரு கௌரவ பாத்திரமாக வந்து போவதைக் கண்டேன். கடந்த காலத்தை, யுத்தச் சூழலை, நமது துன்பங்களைத் துயரங்களை நீள நினைந்து கொள்ள அந்தப் பதிவு உதவியது. நாம் மூவேந்தர் வழிவந்தவர்கள் என்பதையும் இந்தச் சம்பவத்தினூடு உறுதிப்படுத்திக் கொண்டேன்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்குள்ளே கால் வைப்பவர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம் அவர்களின் குடும்பத்தினைக் குறிப்பாக பா.உ. சித்தார்த்தனை நினைக்காமல் ஒரு அடிகூட எடுத்து வைக்கக் கூடாது என்பது எனது மனப்பதிவு. ஒரு பரப்புக் காணிக்காகப் பல வருடங்களாக வழக்காடும் இந்தப் பூமியிலே இப்படி ஒரு பெரிய காரியத்தைச் செய்த திரு. தருமலிங்கம் குடும்பத்துக்குத் தலைவணங்கியே ஆக வேண்டும். இந்த நூலிலே காணி பெற்ற விடயமும் அதற்காகக் கமலநாதன் பட்ட கஷ்டங்களும் விரிவாகப் பதிவாகியுள்ளன.

முனைவர் தி. கமலநாதனின் இந்தப் பெரும் பணியின் முன்னெடுப்புக்கு அவருக்குத் தோன்றாத் துணையாக நின்ற நல்லூர் முருகன் திருவருளும் தோன்றும் துணையாக நின்றுழைத்த டாக்டர் தியாகராஜவின் ஆதரவும் என்றும் போற்றுதற்குரியன.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை செழுமைமிக்க செம்மண் பூமியிலே அமைத்து அதன் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ந்திருக்கும் முனைவர். தி. கமலநாதனின் குன்றா உழைப்பையும் குறையா ஊக்கத்தையும் என்றும் நன்றியுடன் பாராட்ட வேண்டும்.

# யாழில் முதன்முறையாக மாற்று வலுவுடையோருக்கான கலை இலக்கிய விழா



யாழ்.மாவட்டத்திலேயே முதன்முறையாக மாற்று வலுவுடையோருக்கான கலை இலக்கிய விழா பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் கடந்த 16ஆம் திகதி வியாழக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

மேற்படி விழா நிகழ்வானது யாழ்.மாவட்டத்திலுள்ள மாற்றாற்றலுடையோர்களை உள்ளடக்கிய அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைத்து ஒழுங்கமைக்கப்பட்டது.

(ய-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடகம் பொருதல் சமூகத் தொண்டு

## நாடகக் கலைஞர் புதுவை அன்பனின் அரங்க முயற்சிகள்

40ஆம் அணி
நாடகமும் அரங்கக்கலைகளும் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நாடகக் கலைஞர்களது நாடகச் செயற்பாட்டை ஆவணப்படுத்துவது இக்காலத்தின் தேவையாகும். அந்தவகையில் புதுவை அன்பன் எனப் புனைப்பெயரால் அழைக்கப்படும் நாடகக் கலைஞராகிய செல்வத்தின் அரங்க முயற்சிகள் தொடர்பில் நோக்கப்படுகிறது. இவர் கவிதையாக்கம், பாடலாக்கம் போன்றவற்றிலும் பங்களிப்புச் செய்துள்ளார். அது மட்டுமல்லாது கலைத்துறைக்கு வருவதற்கு இரண்டு காரணங்களை இவர் கூறுகிறார். அவருடைய தந்தை நாகமுத்து நாட்டுக்கூத்தில் நடித்த அனுபவமிக்கவர் என்பதால் அதன் செல்வாக்கு புதுவை அன்பனிடமும் காணப்பட்டது. நாடகத்துறையில் இவருக்கு ஆர்வம் ஏற்பட காரணமாக இருந்தது அற்புதாலயா கலாமன்றம் தயாரித்த 'கலையும் கண்ணீரும்' (1970கள்) நாடகம் ஆகும். இந்த நாடகத்துக்கு கொப்பி பார்ப்பவராக (எழுத்துப்பிரதி நினைவூட்டுனர்) சென்ற போது திடீரென அந்த நாடகத்தில் நடிக்க வேண்டிய அற்புதசிங்கம் வராத காரணத்தால் இவரே அந்த பாத்திரத்தை ஏற்று நடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதுவே இவரைச் சிறந்த நடிகராக உருவாக வழிவகுத்தது. கலைப்பெருமன்றம் நடத்திய நாடகவிழாவில் பங்குகொண்ட குமணன் (1970களின் பிற்பகுதிகளில் புதுவை அன்பன் கொப்பிக்காரனாக செயற்பட்ட தருணத்தில்) நாடக விழாவுக்கு இரண்டு நடிகர்கள் வராத சந்தர்ப்பத்தில் பெருந்தலைச் சாத்தனாராகவும், அமைச்சராகவும், அசரீரி கொடுப்பவராகவும் இவரே பாத்திரம் ஏற்று நடிக்கவேண்டியிருந்தது. தனது ஆகச்சிறந்த நடிப்பால் குறுகிய காலத்திலேயே அவர் பெரும் புகழை ஈட்டினார். இதில் சிறந்த நடிகருக்கான விருதை புதுவை அன்பன் பெருந்தலைச் சாத்தனார் பாத்திரத்துக்காகப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து காத்தவராயன் சிந்துநடைக்கூத்த போன்ற ஆற்றுகைகளிலும் நடித்து வந்தார்.

### ஈழப்போரை எடுத்தியம்பிய புதுவை அன்பனின் நாடகங்கள்

புதுவை அன்பன் தயாரித்த நாடகங்கள் பெரும்பாலும் அரசியல், சமூக நாடகங்களாக இருந்தன. களத்தில் காத்தான் (1989) என்ற நாடகத்தை நெறியாள்கை செய்யும் போது இந்த நாடகத்துக்குக் காத்தவராயன் கூத்துப் பாடல்களை எடுத்து அதன் கலைத்துவம் மற்றும் மரபு முறை மாறாத வண்ணம் பாடல்களின் உள்ளடக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி நாடகம் தயாரிக்கப்பட்டதாக புதுவை அன்பன் கூறுகிறார். இந்த நாடகத்தில் ஈழக்காத்தான், ஈழத்தாய் எனும் குறியீட்டு பாத்திரங்கள் ஊடாக ஈழத்தில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் பற்றி நாடகம் பேசுகின்றது. ஈழத்தாய் எனும் பாத்திரம் இந்தியாவிடம் ஆயுதத்தை ஒப்படைக்குமாறு கூறுகின்றபோது காத்தவராயன் கூத்து மெட்டில் ஒரு பாடல் பாடப்படுகின்றது. 'உயிர் கொடுத்து அம்மா எடுத்ததல்லோ. இதை அடுத்தவர்க்கு தாயே கொடுப்பதற்கோ, மாண்டவரின் மன ஜீவனம்மா மற்றவரிடம் ஈந்தால் அது பாவமம்மா' இவ்வாறு பாடல்களின் உள்ளடக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி இந்த நாடகத்தை நெறியாள்கை செய்தார். இந்த நாடகம் 1989, 1990, 1991, 1992 காலப்பகுதிகள் வரை ஆற்றுகை செய்யப்பட்டது.

சதியை வென்ற சாவுகள் (1991) என்ற நாடகம் இலங்கையிலிருந்து சமாதானத் தூதுக்காக சென்றவர்கள் கைது செய்யப்பட்டதால் ஏற்பட்ட பிரச்சினை பற்றியும் இலங்கையில் ஏற்பட்ட பாதிப்புக்களைப் பேசுவதாகவும் அமைந்தது. இந்த நாடகம் முழுவதுமே உணர்ச்சிபூர்வமான பாடல்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. **'போறோம் நாங்கள் போறோம் எங்கள் பொறுமை காக்கப் போறோம். உரிமைக் கொடியை காக்க எங்கள் உயிரைக்கொடுக்கப் போறோம்' 'வாருங்கள் தோழர்களே! வரலாறு படைப்போம், நெருப்பாக எரிகின்றோம், நெய்யாக உருகிறோம்'** இவ்வாறு பாடல்வரிகள் மூலம் கதையை அமைத்ததாக புதுவை அன்பன் கூறுகிறார். இவர் ஆரம்ப காலங்களில் கூத்துக்களில் நடித்திருந்ததால் இவருக்கு பாடல்களை நாடகத்தில் கையாள்வது இலகுவாக இருந்தது.

புதுவை அன்பனின் குருத்தோலை அழுவதேன் (1995) எனும் தெருவெளி நாடகத்தின் ஆரம்பத்தில், பிள்ளைகள் சவப்பெட்டியை காவிக்கொண்டு செல்வார்கள். 'சாவினைச் சுமக்குது எதிர்காலம்ஃ இளம் சந்ததிக்கேன் இந்த துயர் கோலம்?' என்று மக்களை கேள்வி கேட்பதாக நாடகம் அமைந்தது. இந்த நாடகத்தின் கோட்பாடு, கட்டமைப்புக்கள் தொடர்பாக சில விமர்சனங்கள் எழுப்பப்பட்டது. யுத்தக் காட்சிகளை சிறுவர்களை வைத்து செய்யலாமா என்று கேட்டார்கள். அதற்கு புதுவை அன்பன் எனக்கும் விருப்பமில்லை. ஆனால் பிள்ளைகள் யுத்தச்சூழலில்தான் வாழ்கிறார்கள். இந்த சூழல் மாறினால் நீங்கள் சொல்வதுபோல நாடகம் போடலாம். அதுவரைக்கும் என் பிள்ளைக்கு இந்தச் சூழலில்தான் வாழக் கற்றுக் கொடுப்பேன். எமது வரலாறு நாம் பட்ட இன்னல்களை சொல்லிக்கொடுத்து தான் பிள்ளைகளை வளர்க்க வேண்டும்' என்று கூறுகின்றார்.

யுத்தகாலத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களை விமர்சிப்பதாக 'மீண்டும் ஒரு வெள்ளைப்புறா' (1996) நாடகத்தை புதுவை அன்பன் தயாரித்தார். இந்த நாடகத்தில் ஒருவர் தாயை வன்கொடுமைப்படுத்தும் போது மகன் தனது தாயை விடுமாறு கெஞ்சியபோதும் அவன் விடுவதாக இல்லை. பின்னர் அச்சிறுவன் காலைப்பிடித்து கெஞ்சும்போது அவன் காலால் உதைகின்றான். இதனால் சிறுவன் கத்தியுடன் அவனை குத்தச்செல்லும் போது அரச சார்பற்ற நிறுவனக்காரன் அந்த சிறுவனை தடுத்து 'இதை நீ செய்யக்கூடாது' என்று சொல்கின்றான். அதற்கு அந்தச் சிறுவன் தனது தாயை காப்பாற்றும்படி கேட்க, அதற்கு அரச சார்பற்ற நிறுவனக்காரன் 'இது என்னுடைய வேலை இல்லை' என்று கூறுகின்றான். இவ்வாறாக அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கு உதவி செய்கிறதா அரசுக்கு உளவு பார்க்கிறாதா என்று விமர்சிக்கத்தக்கதாக நாடகத்தைத் தயாரித்தார்.

### வசனங்களை விடவும் குறியீடுகளே பேசின

புதுவை அன்பன் தனது நாடகங்களில் எழுத்துருவுக்கு முக்கியம் கொடுக்காது அந்த கணத்திலே குறைந்தளவு வசனங்களை வைத்து நாடகங்கள் தயாரித்ததாகக் கூறுகின்றார். 'கரைதேடும் ஓடங்கள்' (2004) எனும் நாடகம் யுத்தத்தால் யாழ்ப்பாணத்தில் தந்தையும், வன்னியில் அவர் மகன், மருமகள், பேரப்பிள்ளைகளும் பிரிந்து வசிக்கையில் இவர்களிடையே கடிதத்தால் உரையாடல் இடம்பெறுவது போல நாடகம் உருவாக்கப்பட்டது. தந்தை மகனை யாழ்ப்பாணம் வரும்படி கடிதம் அனுப்பிய போது, மகன் தனது மனைவியிடம் 'என்ன பதில் அனுப்புவது?' என்று கேட்க மனைவி கூறுவார் 'யாரை நம்பி வந்தோமோ அந்த மனுசனோடதான் திரும்பி வருவோம்'. இவ்வாறு வசனங்களை குறைத்தும் அதில் குறியீட்டையும் பயன்படுத்தி நாடகங்கள் தயாரித்ததாக கூறுகின்றார்.

புதுவை அன்பன் அரசியல், சமூக நாடகங்களை அதிகமாக நெறியாள்கை செய்ததனால் குறியீடுகளை அதிகமாக கையாண்டதாகவும் பார்வையாளருக்கு இலகுவாக விளங்கும் வகையிலும் குறியீடுகளை கையாள வேண்டும் என்றும் கூறுகின்றார். பாடல்கள், வசனங்கள், வேட உடைகளில் குறியீடுகளை அதிகமாக பயன்படுத்தியுள்ளார். 'கரைதேடும் ஓடங்கள்' நாடகத்தில் வெள்ளைக்காரன் பாத்திரத்துக்கு வெள்ளைத்தொப்பி பயன்படுத்தப்பட்டது. வளப்பாற்றாக்குறையும் நாடகத்தில் குறியீடு பயன்படுத்தியமைக்கு காரணம் என்று கூறுகின்றார்.

புதுவை அன்பனின் நாடகங்களில் பாடல்கள் அதிகம் பயன்படுத்தப்படுவதால் இசை அதிகமாகக் கையாளப்பட்டது. மேலும் நாடகத்தில் ஏற்படும் பலவீனத்தை சமனிலைப்படுத்தவும், காட்சிகளை மெருகூட்டி காட்டுவதற்காகவும் பார்வையாளர்களின் மனங்களில் காட்சிகளை ஆழமாகப் பதிய வைக்கவும் இசை கையாளப்பட்டது. இசை அமைப்பாளர்களும் நாடக வசனம், காட்சி என்பவற்றை முழுமையாக அறிந்திருக்க வேண்டும் என்பதற்காக நாடகத்தயாரிப்பு ஆரம்பத்திலிருந்தே இவர்களும் நாடகத்தில் பங்குபற்றுவார்கள். புதுவை அன்பன் தனது நாடகங்களில் காட்சியமைப்பில் பிரம்மாண்டத்தை காட்ட விரும்பவில்லை. ஏனெனில் அது படைப்பாளியின் கற்பனையை சுருக்கிவிடும். காட்சியமைப்பில் சுருக்கத்தை கையாளும் போது படைப்பாளியின் வெளிப்பாட்டுக்கு இடமளிக்கும் என்றும் கூறுகின்றார். வளப்பற்றாக் குறையும் காட்சியமைப்பை சுருக்கி கற்பனையை தூண்டியதாக கூறுகின்றார். கரைதேடும் ஓடங்கள் நாடகத்தில் சுனாமியின் தாக்கத்தினை பிரமாண்டமாக காட்டுவதற்காக திரைச்சீலையை பயன்படுத்தி திரைக்கு பின்னிருந்து திரையை அசைத்து ஒளியையும் ஒலி விளைவையும் பயன்படுத்தி கடலலையை பிரமாண்டமாக காட்டியதாக கூறுகின்றார். புதுவை அன்பன் நாடகங்களுக்கு மிகவும் எளிமையான முறையிலேயே ஒப்பனை செய்வதாக கூறுகின்றார்.

புதுவை அன்பன் நாடகத்தில் அனைத்து துறைகளிலும் செயற்பட்டிருந்தாலும் அவர் அதிகம் நெறியாளராகவே அறியப்படுகின்றார். புதுவை அன்பனின் நெறியாள்கை முறையை நோக்கினால் இவர் பாரம்பரிய அரங்குகளின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்ததால் அவரது நாடகங்களில் பாடல், ஆடல் என்பன அதிகமாகக் காணப்பட்டன. இவர் நாடகங்களில் ஒத்திகையின் போது நடிகர்களுக்கு ஒழுக்கம் முக்கியம் என்பதை வலியுறுத்துவார்.

மேலும் நடிகர்களுடன் கலந்துரையாடி நெருக்கத்தோடு இருப்பதும் அப்போது தான் நடிகர்களுக்கு நடிப்பதில் விருப்பம் வரும் என்று கூறுகின்றார். ஒத்திகையின் போது கணத்தில் தோன்றுவனவற்றையே ஆடல் பாடலாக அமைப்பதாகவும் கூத்து ஆடல்கள் நடிகர்களுக்கு வராதுவிடின் அதற்காக இலகுவான ஆடல் வடிவங்களை உருவாக்குவதாகவும் கூறுகின்றார். புதுவை அன்பன் வேறு ஒருவருடைய எழுத்துருவையும் தான் நெறிப்படுத்தவில்லை என்று கூறுகின்றார். வேறு ஒருவருடைய எழுத்துரு என்றால் அதில் தனது சிந்தனையை முழுமையாக வெளிப்படுத்த முடியாதென்கிறார். புதுவை அன்பனின் கருத்துப்படி நாடகம் என்பது நடிப்பதற்கு மட்டுமல்ல அது சமுதாயத்தொண்டு என்று கூறுகின்றார். உணர்வுபுர்வமான நாடகங்களை இவர் வழங்க முற்படுகின்றார் என்பதை இவரது நாடகங்களின் வாயிலாக எம்மால் அறியக் கூடியதாக உள்ளது. மேலும் வீர அபிமன்யு (1970 பிற்பகுதி) அவலங்கள் (1992), நெருப்பு நதியில் நீந்திய மனிதகர்கள் (2002), இவர்களும் மனிதர்கள் (2002), வெள்ளைப்புறா சிவப்பானதேன் (2003), உயிர்த்தெழுவோம் (2003), மனவிலங்கு (2003), மனிதம் உறங்கினால் (2004), பொறுத்தது போதும் (2004), ஒருதாயின் கதை (2005), மனங்கள் மாற வேண்டும் (2011), இது விதியல்ல (2015) போன்ற நாடகங்களையும் இவர் தயாரித்துள்ளார். புதுவை அன்பன் தந்போதும் நாடகத்துறையில் செயற்பட்டு வருகின்றார். அத்துடன் பாடல்கள், கவிதைகளையும் எழுதிவருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



கடந்த (14.03.2023) செவ்வாய்க்கிழமை சிவபத பேறடைந்த எமது குடும்பத் தலைவரும் எடிசன் கல்வி நிறுவனத்தின் அதிபரும், ஸ்தாபகரும் ஆகிய

அமரர்
**B.P. பாஸ்கரன்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (13.04.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இல.63, கல்லூரி வீதி, நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

தொ.பே.: 077 161 1865 (cs 49966) (N.1) குடும்பத்தினர்


# மும்பை இந்தியன்ஸ் நேற்று டெல்லியைத் தோற்கடித்தது



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற டெல்லி கப்பிட்டல்ஸ் அணியுடனான ஆட்டத்தில் போராடி வென்றது மும்பை இந்தியன்ஸ் அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை அணித்தலைவர் ரோகித் சர்மா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தார். டெல்லி அணி ஆரம்பம் முதல் சரிவையே கண்டது. அணித்தலைவர் வோர்ணர் நிலைத்து நின்றாலும் மறு முனையில் சீரான இடைவெளியில் இலக்குகள் சரிய டெல்லி அணி 150 ஓட்டங்களைப் பெறுவதே கடினம் என்றாகியது. அக்சர் பட்டேல் மத்திய வரிசையில் அதிரடி காட்டினார். அவர் 25 பந்துகளில் 54 ஓட்டங்களைக் குவித்தார். வோர்ணர் 47 பந்துகளில் 51 ஓட்டங்களைப் பெற்றார். முடிவில் 172 ஓட்டங்களைப் பெற்றது டெல்லி அணி.

173 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மும்பை அணிக்கு ஆரம்ப இணை சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது. அணி 71 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இசான் கிசன் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து வந்த திலக் வர்மாவும் ரோகித்துடன் இணைந்து ஆட்டத்தை கட்டியமைக்க மும்பையின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. திலக் வர்மா 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்த பந்திலேயே சூர்ய குமார் யாதவும் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார். இது அவர் இறுதியாக விளையாடிய 6 போட்டிகளில் பெற்ற நான்காவது ஓட்டமற்ற ஆட்டமிழப்பாகும். ரோகித் சர்மா 45 பந்துகளில் 65 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க மும்பை அணி திடீர் பின்னடைவுக்குள் தள்ளப்பட்டது. 19ஆவது பந்துப் பரிமாற்றத்தில் இரண்டு சிக்சர்களை விட்டுக்கொடுத்தார் முஸ்டபிஷீர் ரஹ்மான். இது மும்பைக்கு வாய்ப்பை பிரகாசப்படுத்த ஒருவாறாக தட்டித்தடுமாறி இறுதிப்பந்தில் வெற்றிபெற்றது மும்பை இந்தியன்ஸ் அணி. (ம-ரி)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 13 - 02 - 1939



மறைவு 13 - 03 - 2023

**அமரர் பசுபதி இராசம்மா**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே! ஆல விருட்சமாய் அருகிருந்து அறிவுரைகள் பல கூறி - இன்று எம்மை எல்லாம் கலங்கவிட்டு நீர் சென்று மாதமொன்று ஆனதம்மா ஆண்டுகள் பல சென்றிடினும் எம் நெஞ்சக் கூட்டறைக்குள் நித்தியமாய் என்றும் வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள்.

அன்னாரின் துயரச்செய்தியறிந்து நேரிலும் தொலைபேசியூடாகவும் ஆறுதல் தெரிவித்தோருக்கும், கண்ணீரஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (12.04.2023) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி.
(CS/24331)AH-1
குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 05 . 1941



மறைவு 11 . 04 . 2023

**செல்லையா இலட்சுமி (மணி)**

வளர்மதி வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இலட்சுமி (மணி) அவர்கள் நேற்று (11.04.2023) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெள்ளையன் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு புதல்வியும், பண்டாரி - நாகி தம்பதியரின் அன்பு மருமகளும், செல்லையா அவர்களின் ஆருயிர் மனைவியும், லேகவதி, ரேகவதி, லோகராஜா, ஜெயராஜா, லோகீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மராஜா, பரமநாதன், துஸ்யந்தி, சுஜேந்தினி, சுதாமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுகன்யா, மிதிலா, ஆருயன், ஆருஷா, அபிநாத், விசாளகன், சீராளன், பரிதியன், எழிலன், விழியன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பொன்னி அவர்களின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2023) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் மட்டுவில் தெற்கு சின்னதூ மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே: 077 8351 584
(CS 24432) A-1




மட்டுவில் பிரதேசத்தைச் சேர்ந்த வயோதிப நபரொருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தா[illegible] வாகனத்தை 2 கிலோ மீற்றர் தூரத்துக்கு கட்டியிழுத்துச் சென்று சாதனை புரிந்துள்ளார். (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபி பஷன் வேல்ட் இன்

ABI Fashion World

புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி

இச் சலுகை 14.04.2023 வரை மட்டுமே




0212223738 ரெடிமெற் ஆடைகளின் சங்கமம் f abifashionworld

## யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் அறிவித்தல்


யா/ வைத்தீஸ்வராக் கல்லூரியில் அண்மைக்காலமாக நடைபெறும் விரும்பத்தகாத செயற்பாடுகள் காரணமாக பழைய மாணவர் சங்க நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரும் தற்காலிகமாக பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளிலிருந்து விலகியிருப்பதாக கடந்த 2023.04.09 ஆம் திகதி நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும் எமது சங்கத்துக்கும் **முன்னாள் மாணவர் நண்பர்கள்** என்ற பெயரில் இயங்கும் குழுவுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பதையும் எமது சங்கம் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் பழைய மாணவர்களிடம் நிதி வசூலிப்பதற்கு இக்குழுவுக்கு அனுமதி வழங்கவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**செயலாளர்,**
**இ.கிருஷ்ணகுமார்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி.**

(CS/49971)AH-1

## மரண அறிவித்தல்



**திரு. கணபதிப்பிள்ளை கிறிஸ்ரி எல்மன்**

திரு. கணபதிப்பிள்ளை கிறிஸ்ரி எல்மன் நேற்று முன்தினம் (10.04.2023) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சூசானம் தம்பதிகளின் அன்புப் புதல்வரும், திருமதி யூடிற் கிறிஸ்ரி எல்மன் (முன்னாள் முன்பள்ளி ஆசிரியை- தி.கு.க. முன்பள்ளி) அவர்களின் அன்புக் கணவரும், ஆன் நொயிலின் (பயிற்சி வங்கி உதவியாளர், DFCC வங்கி, சுன்னாகம் கிளை), ஆன் கரோலின் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திரு கணபதிப்பிள்ளை கிறிஸ்ரிஜோய் , காலஞ்சென்ற மரியரட்ணம் கிறிஸ்ரி ஜொய்ஸி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கி. மேரி கலிஸ்ரா, காலஞ்சென்ற சி. மரியரட்ணம் மற்றும் அ. யூட் ததேயுஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைத் திருப்பலி இன்று (12.04.2023) புதன்கிழமை பி.ப.3.00 மணிக்கு யாழ். புனித யுவானியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**18 ஏ, கோயில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

# ஹெரோய்ன் பெண் வியாபாரி நேற்று மாலை அதிரடிக்கைது

யாழ்ப்பாணம், ஏப். 12

உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்ன் வர்த்தகத்தில் ஈடுபடும் பிரபல பெண் வியாபாரியொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், பொம்மைவெளிப் பகுதியைச் சேர்ந்த அவர் யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்றுமாலை கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 5 கிராம் ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் அவரை நீதிமன்றத்தில் பாரப்படுத்தும் நடவடிக்கையிலும் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (அ-ம-125)

# ரணிலை விட திறமையானோர் பெரமுனக் கட்சியில் உள்ளனராம்

*சாகர காரியவசம் சான்றிதழ்*

கொழும்பு, ஏப். 12

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடிய தகுதியான வேட்பாளர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வசம் உள்ளனர். அத்துடன் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விடவும் திறமையான வேட்பாளர்கள் எமது கட்சியில் உள்ளனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஊடக சந்திப்பொன்று இடம்பெற்றது.

அதில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை மொட்டு கட்சி எடுத்துள்ளதா என ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் கட்சி இன்னும் எந்த முடிவையும் எடுக்கவில்லை. தேர்தலில் போட்டியிடக்கூடிய தகுதியான வேட்பாளர்கள் எமது கட்சி வசம் உள்ளனர். ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே எமது வேட்பாளர் அறிவிக்கப்படுவார். ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் காலம் உள்ளது. தற்போது அது பற்றி அறிவிப்பது ஏற்புடையது அல்ல.

அத்துடன் ரணில் விக்கிரம சிங்கவை விடவும் திறமையான வேட்பாளர்கள் கட்சியில் உள்ளனர்- என்றார். (எ-14, 44)

## 104 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட முன்னோடி விளையாட்டுக்கள்

**13.04.2023 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு வடமாகாணம் மற்றும் உள்ளூர் ரீதியிலான வீதியோட்டம் ஆண்கள் மற்றும் பெண்கள் (பொது)**

- **சைக்கிளோட்டம் - ஆண்கள்** மற்றும் **பெண்கள்** (பொது)
- உள்ளூர் போட்டியாளர்கள் அரியாலையைப் பிறப்பிடமாக அல்லது வசிப்பிடமாக கொண்டிருத்தல் வேண்டும்.
- வெளியூர் போட்டியாளர்கள் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
- போட்டியாளர்கள் **13.04.2023** காலை **5.30** மணிக்கு வருகை தந்து பதிவை மேற்கொள்ளவேண்டும்.

**தொடர்புகளிற்கு:**
**077 610 2405**
**077 236 7527**

**நிர்வாகம்.**

(cs.49967) (N-1)

## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் தலைவர் **திரு.சி.ஜெகதீஸ்வரன்** அவர்களின் அன்பு மாமியாரும், எமது மகளீர் அமைப்பின் உறுப்பினர்களான **திருமதி சித்திரா வரதராஜ்** மற்றும் **திருமதி கெங்கா ஜெகதீஸ்வரன்** ஆகியோரின் பாசமிகு தாயாருமாகிய

**அமரர் தீபமணி பாலதேவன்**



**சம்பியன் ஒழுங்கை,**
**கொக்குவில்.**

அவர்கள் இயற்கை எய்தியமையினையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினை தெரிவிப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கொக்குவில் வளர்மதி**
**முன்னேற்றக் கழகமும்**
**சனசமூக நிலையம், வளர்மதி**
**நிறைவாழ்வகம்**

(CS 24429)A-1

## சைவ வித்தியா விருத்திச் சங்கம் பழைய கட்டடம் விற்பனைக்கு

சைவ வித்தியா விருத்திச் சங்கச் சைவச் சிறுவர் இல்லத்தின் (ஆண்கள்) விடுதியில் 150''x 20' விஸ்தீரணமுள்ள பழைய கட்டடத்தின் பகுதியளவு பயன்படு பொருள்களுக்குக் கேள்விகோரப்படுகிறது.

நேரடியாகப் பார்வையிட்டு கூறுவிலையை **17.04.2023** இற்கு முன்னர் அலுவலகத்தல் ஒப்படைக்கவும்

**கலாசாலை வீதி,**
**[illegible],**
**[illegible] 021 222 6525**
**077 083 7567**

**திரு.லோ. துஷிகரன்**
**செயலாளர்.**

(cr.39360) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சா விற்பனை: கைதானார் பெண்

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவர் காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து ஒரு கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக அச்சுவேலி பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளார். (ம-14.23)

## கடற்படையால் கேரளக் கஞ்சா மீட்பு!

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்திவரப்பட்ட 84 கேரளக் கஞ்சா, பொலிகண்டி கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை மீட்கப்பட் டுள்ளது. கடற்படையினர் இரவுக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டவேளை மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையின் போதே மேற்படி கஞ்சாப்பொதிகள் மீட்கப்பட்டன. சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. (ம-14,20,23)


## பெயர் மாற்றம்

வேதநாயகம் அன்ரன் ஜெயகுமார் ஆகிய நான் இன்று தொடக்கம் வேதநாயகம் ஜெயகுமார் என மாற்றம் செய்துள்ளேன் என இலங்கை குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன் இனிவரும் காலங்களில் வேதநாயகம் ஜெயகுமார் என்று கையொப்பம் இடுவேன் என உறுதிப்படுத்துகின்றேன்.

**வேதநாயகம் ஜெயகுமார்**

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியர் திருமதி ப.பிரசன்னா அவர்களின் அன்பு மாமனார்

**சின்னப்பு இரத்தினம்**

அவர்கள் கடந்த (06.04.2023) வியாழக்கிழமை சிவபதம் எய்தினார். அவருக்கு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம்**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

(CS 24429)A-1

## யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி



திருமதி. வாசுகி தவபாலன் (SLP-1)
B.Sc.(Hons.), PGDE.(Distinction),
M.Ed., M. Phil., PGDEM.(Merit).
அதிபர், யாழ் வைத்தீஸ்வரா கல்லூரி.

**புதிதாக இணையும் மாணவர்களின் கற்றலை ஊக்குவிப்பதற்கான அனுசரணைகள்**

**தரம் 1, 2, 3, 6, 7, 8 மற்றும் 9 ஆம் வகுப்புகளுக்கான மாணவர்களும் உள்வாங்கப்படுகின்றனர்**

தரம் 1, 2, 3, 6, 7, 8 மற்றும் 9 இல் புதிதாக இணையும் மாணவர்களின் பெற்றோர்கள் கவனத்திற்கு உடனடியாக கல்லூரி காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் பிள்ளைகளின் பதிவுகளை உறுதிப்படுத்தும் படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். மேலும் யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் கீழ்வரும் அனுசரணைகளை புதிதாக இணையும் தரம் 1, 2, 3, 6, 7, 8 மற்றும் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்க உள்ளனர்.

1) சீருடை மற்றும் கழுத்துப்பட்டி, 2) சப்பாத்து மற்றும் காலுறைகள் 3) புத்தகப்பை 4) கற்றல் உபகரணங்கள்
5) பொருளாதார ரீதியில் பின் தங்கிய மாணவர்களுக்கு மேலதிக கற்றலுக்கான அனுசரணைகள்



**யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியின் முன்னாள் மாணவர்கள்**
**தொடர்புகளுக்கு**
**212 சிவன் கோவில் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம், இலங்கை.**
**தொலைபேசி இலக்கம் : 021 222 3322**

## விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புதிய **நைட்டி துணிகள்** (2.90m) மலிவு விலையில் 925/- விற்பனையாகின்றன.

**33,35 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச் சந்தி.**

**077 415 1947**

## ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

ஒப்பந்த அடிப்படை

- எரிபொருள் நிலைய முகாமையாளர்
- எரிபொருள் நிரப்புனர்

மேற்படி பதவிகளுக்கு தகைமையுடையோர் அலுவலக நேரத்தில் எம்முடன் தொடர்பு கொண்டு விபரங்களை பெற்று (18.04.2023)க்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர். 021 221 1648

# மரண அறிவித்தல்

## திரு. நல்லையா கனகரத்தினம் (அப்பு)

**தோற்றம்** 20.08.1943 — **மறைவு** 11.04.2023



டச்சுவீதி உடுவிலைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா கனகரத்தினம் நேற்று (11.04.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - இரத்தினம் தம்பதியரின் மருமகனும், திருமதி மணிமேகலையின் (ராதா) அன்புக் கணவரும், கவிதா (லண்டன்), அகிலா (லண்டன்), மடுப்பிரசாத் (மடு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்கந்தரூபன் (லண்டன்), இந்திரவேல் (லண்டன்), சங்கரி (கொமர்சல் வங்கி - கொடிகாமம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சீவரத்தினம், சிவபாக்கியம், கனகமணி, கந்தசாமி மற்றும் செல்வமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற குமாரசாமி, மற்றும் பராசக்தி, காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், நடராசன் மற்றும் இராசரத்தினம் (சேனா), காலஞ்சென்றவர்களான விமலசூரியர், இராஜசூரியர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற தனலட்சுமி (தனம்) மற்றும் இன்பரதி (இன்பம் - லண்டன்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், கலிங்கன் (லண்டன்), யாலவன் (லண்டன்), காந்தவி (லண்டன்), கேதாரணன் (லண்டன்), கேதனா (லண்டன்), ஆங்கீசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2023) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
**குடும்பத்தினர்**
**077 368 2354**

(cs.24418 ) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 02 . 1953



மறைவு 09 . 04 . 2023

## பேரம்பலம் செல்வராசா
(Formely DGM, Asia Pacific- Nichimen cooperation Ltd, Japan-Srilanka)

அத்தாய் பூநகரியை பிறப்பிடமாகவும் கொழும்பு, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் செல்வராசா கடந்த (09.04.2023) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் முத்துப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் இராசம்மா தம்பதியரின் மருமகனும், நித்தியாதேவியின் அன்புக் கணவரும், சுமந்தனின் அன்புத் தந்தையும், கோபாலசிங்கம், புஸ்பராணி, சரஸ்வதி, தனலட்சுமி (லண்டன்), தன பாலசிங்கம் (அதிபர், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), கமலராணி (ஜேர்மனி), விமலராணி (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், மருதங் கேணி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மாவதி (இந்தியா), தர்மகுல சிங்கம் (லண்டன்), அமரர் தனபாலசிங்கம், நீலாதேவி, நிர்மலாதேவி (ஜேர்மனி), தவீந்திரசிங்கம் (டென்மார்க்), குணபாலசிங்கம் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.04.2023) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு இல.89, சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.** (CS 24426) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 12 . 1943



மறைவு 11 . 04 . 2023

கலாபூஷணம், கலைஞானச்சுடர், கலைமாமணி
## வல்லிபுரம் கற்கண்டு

வடமராட்சியைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை மற்றும் அரியாலையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்டவருமான கலாபூஷணம், கலைஞானச்சுடர், கலைமாமணி வல்லிபுரம் கற்கண்டு அவர்கள் நேற்று (11.04.2023) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் இரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சின்னக்குட்டி ஆத்தையின் பேரன்புக்குரிய பேரனும், காலஞ்சென்ற பெருமாள் உடையார் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகாமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தவமணிதேவி, ஸ்ரீ பரிமளகாந்தம் மற்றும் துரைராஜா (விஜயன் - இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவலதா (லண்டன்), சிவப்பிரியா (உதவிச்செயலாளர், கல்வியமைச்சு, வடமாகாணம்), உதய ராஜ் (லண்டன்), சிவரதி (லண்டன்), Dr.உதயசீலன் (வைத்தியர், ஆதார வைத்திய சாலை, பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜனகன் (லண்டன்), சுபாஸ்கரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்), ஜெருஷா (லண்டன்), ஷெரோன் (லண்டன்), Dr. நிஷாந்தினி (வைத்தி யர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கிருதிக், தாமிரா, ஆராதனா, ஆதிரா, அகரன், ஆதிரன், தளிர் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற வெற்றிவேலாயுதம் மற்றும் ரேவதி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2023) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இல.29, சாத்திரியார் லேன், அரியாலை, யாழ்ப்பாணம் எனும் முக வரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

தொடர்பு: **077 65 44454, 021 221 1007**

(CS 24427) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 07 . 1951



மறைவு 10 . 04 . 2023

## திருமதி பொன்னையா விமலாதேவி

கந்தரோடையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா விமலாதேவி கடந்த (10.04.2023) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பூபாலராசா மற்றும் சிவமணிதேவி, கௌசலாதேவி, சியாமளா தேவி, காலஞ்சென்ற ஜெயதேவி மற்றும் கமலாதேவி, பாஸ்கரன், சாரதாதேவி, சுசீலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கந்தசாமி, தங்கம், சுப்பிர மணியம், காசிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும், குமரேசன், ஆதித்தன், மயூரன் ஆகியோரின் பாசமிகு தாயும், பாமினி, தயாளினி ஆகியோரின் அன்பு மாமியாரும், வர்ணிகா, சருண், கிரிஷாய், டறிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2023) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கந்தையா உபாத்தியார் வீதி,**
**கந்தரோடை, சுன்னாகம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 344 1413**

(CS 2442[illegible]) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 06 . 1947



மறைவு 09 . 04 . 2023

## திருமதி பவானி குணராசன் (புவனசுந்தரி)

யாழ். கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பவானி குணராசன் அவர்கள் கடந்த (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அருட்கவிமாமணி வே.செல்வநாயகம் (முன்னாள் விவேகானந்தா அச்சக உரிமையாளர்) நாகரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான முத்தையா நாகரட்ணம் தம்பதிகளின் அன்பு மருமகளும், குணராசன் (முன்னாள்- குணம் அன் கோ உரிமையாளர்) அவர்களின் ஆருயிர் மனைவியும், நிமலன், சுதாந்தி, நிசாந்தி, கௌசிகா (CPA, CGA) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயந்தி, அரவிந்தன் (Automotive Quality Controller), இளமுருகன் (அம்பாள் ரேடிங்), ராம்பிரகாஷ் (Canadian Air Force) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெனிக்கா (ஆசிரியை)- அனுஜன் (Optician), நிஜேன் (York University), பவித்ரா (Immigration Canada)- நிஷான் (Senior Analyst CIBC), சஜித்ரா (Service Canada), நகீஷ் (Service Canada)- நிதர்சிகா (Service Canada), கேஷன் (Advisor to the Deputy Minister of Health Canada), கேஷிகா (ஆசிரியை), ஹரிஷன் (University of Ottawa), ஆத்மன், ஆத்மிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆதிரன் அவர்களின் ஆருயிர் பூட்டியும், காலஞ்சென்ற மாலினிதேவி (முன்னாள் அதிபர் CCTMS, கொக்குவில்) மற்றும் சிறீதரன், கிருபாகரன், கிரிஜாலினி, பரிபாலினி ஆகியோரின் பாசமிகுசகோதரியும்,காலஞ்சென்ற வைத்தியர் வேதநாதன் மற்றும் சிவகுமாரி, கமலா, வரதராசா, கமலநாதன்காலஞ்சென்றவர்களான கனகராசா, பத்மநாபன், சுவேந்திரராசா, மகேந்திரராசா மற்றும் சுசிலாதேவி, ஜெயராஜா, பத்மாதேவி, விஜயராஜன், பாலராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2023) புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு Chapel Ridge Funeral Home & Cremation Centre (8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada) நடைபெற்று மாலை 4 மணியளவில் அவரின் பூதவுடல் Highland Hills Funeral Home & Cemetery (12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada) எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**+1647 7788 731**


(CS 24424) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 • 02 • 1960



மறைவு 10 • 04 • 2023

## மகாலிங்கம் சிதம்பரநடேசன்

மூளாய் வீதி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், காளிகோவிலடி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் சிதம்பரநடேசன் நேற்றுமுன்தினம் (10.04.2023) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - தவமணி தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான வடிவேலு - கனகம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும், வனிதாவின் (பெரியவள்) பாசமிகு கணவரும், கலாவதி, சிற்சபேசன் (அப்பன்), லிங்கேஸ்வரி, அப்புலிங்கம் (ராசன்), கௌரி, கோபி, சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் பாலச்சந்திரன் (வேவி), காலஞ்சென்ற விஜயரத்தினம் (சின்ராசு), மற்றும் பத்மநாதன் (பொன்னுக்குட்டி), சிறிரங்கநாதன் (ரங்கன்), கணேசமூர்த்தி (கணேஸ்), செந்தில்நாதன் (செந்தில்), புஸ்பவதனி (சின்னவள்), சாந்தவதனி (சாந்தி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஹரிசாந்த், பிரசாந்த் (லண்டன்), மோகனசாந்த், கிருசாந்த், கலைவாணி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2023) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஹரிசாந்த் - 077 124 5190**
**மோகனசாந்த் - 077 034 9494**
**கிருசாந்த் - 077 404 7390**

(CS/24414)AH-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

பிறப்பு 08 • 01 • 1948



உதிர்வு 10 • 04 • 2023

## தம்பித்துரை பாலச்சந்திரன்

**(ஓய்வுபெற்ற அரச நில அளவையாளர், ஈழத்துச் சீரடி அறங்காவலர், முன்னாள் தலைவர் – வேம்படி முருகமூர்த்தி கோவில்)**

தாவடி தெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், நல்லூர், நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை பாலச்சந்திரன் நேற்றுமுன்தினம் (10.04.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - இரத்தினம் தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - கருணாகடாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், தர்மேஸ்வரியின் (பொன்னான்) அன்புக் கணவரும், ராகவனின் (ஆசிரியர் - யா/ கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயம்) அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, தனபாலசிங்கம், பரமேஸ்வரி மற்றும் தங்கேஸ்வரி ஆகியோரின் உடன்பிறந்த சகோதரனும், காலஞ்சென்றவர்களான அரியராசா, துரைசிங்கம், நாகேஸ்வரி, சரஸ்வதி மற்றும் மகேஸ்வரி, பாலச்சந்திரன், இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2023) புதன்கிழமை காலை 8 மணியளவில் தாவடி தெற்கு, கொக்குவிலில் உள்ள அன்னாரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வேம்படி முருகமூர்த்தி கோவிலடி,**
**தாவடி தெற்கு, கொக்குவில்.**
**077 611 6453, 077 481 5336**

(CS/49969)AH-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

மலர்வு 28 • 08 • 1946



உதிர்வு 10 • 04 • 2023

## அந்தோனிப்பிள்ளை றோஸ்மலர் (வேவி)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை றோஸ்மலர் (வேவி) நேற்றுமுன்தினம் (10.04.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான டானியல் - ஆரோக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை (சீமெந்துக் கூட்டுத்தாபனம்) யின் அன்பு மனைவியும், அமலதாஸ் (பாவன் - பிரான்ஸ்), கலைச்செல்வி (செல்வி), தேவஜானகி (ஜானு, லண்டன்), ஜெயந்தன் (ஜெகன் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், றஞ்சன் (லண்டன்), வின்சன்போல் (றேமன்), நந்தினி (பிரான்ஸ்), ஜஸ்பினாஜென்ஸ் (ஜென்சி - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரியேசன், நிருசன், தனுஸ், ரனிஸ்ரன், சகானா, நிதின், கிஷோன், சானியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நாளை (13.04.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணிக்கு உரும்பிராய் புனிதமிக்கேல் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அமலதாஸ் (பாவன் - பிரான்ஸ்)**
**003362 18 41977**
**ஜெயந்தன் (ஜெகன் - லண்டன்)**
**0044 75076 78837, ரனிஸ்ரன் - 074 151 0273**

(CS/24415)AH-1

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 15 • 07 • 1932



ஆண்டவன் அடியில் 10 • 04 • 2023

## திருமதி கிறிஸ்ரீனா இரட்ணாவதி அன்ரன்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறிஸ்ரீனா இரட்ணாவதி நேற்றுமுன்தினம் (10.04.2023) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இம்மானுவேல் பெஞ்ஜமின் அன்ரன் அவர்களின் அன்பு மனைவியும், பிலிப் ஜெயக்குமார் (கனடா), பவானி (கனடா), விஜயகுமார் (கனடா), மோகனகுமார் (ஆசிரியர் - யாழ்ப்பாணக்கல்லூரி), மரீனா (கனடா), பிரான்ஸிஸ் (பிரதி அதிபர் - யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அனற்றா (கனடா), காலஞ்சென்ற சுரேஸ், சுகந்தி (கனடா), நிமலினி (ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி), ரவீந்திரகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரதுஷா, பிரவீன், கன்னீஷா (கனடா), திஷோன், ஜெசுரன் (கனடா), அமென்டா (மாணவி - வவுனியா பல்கலைக்கழகம்), இமெல்டா (மாணவி - யாழ்ப்பாணக் கல்லூரி), பெஞ்சோ, ஜஷான் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிரன், ஆயிஷன், ஆவணி, ஐசக், யோனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs49970) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VACANCY ADVERTISEMENT – IM & GIS MANAGER
## THE HALO TRUST - SRI LANKA

The HALO Trust is a non-political, non-religious NGO, registered in Britain as a charity (no.1001813 and SCO37870) and in the United States as a 501(c)(3) Not-for-Profit organisation. HALO specialises in the removal of the debris of war and employs almost 10,000 staff in 28 countries. All programmes are supported by a headquarters in the UK.

HALO began operations in Sri Lanka in 2002, undertaking an extensive minefield survey. This survey provided much of the baseline minefield data now held in the national database and was the basis for the decision for HALO to set-up a large humanitarian mine clearance programme. Currently, HALO Sri Lanka employs over 1,300 local staff, who work as skilled survey/Explosive Ordnance Disposal (EOD) teams, alongside manual and mechanical mine clearance staff, and support staff. HALO's operations are focussed in the Jaffna, Kilinochchi and Mullaitivu Districts.

**Duties and responsibilities:**

The IM/GIS Manager is primarily responsible for the management, maintenance and analysis of programme operational data, and the production of accurate, informative mapping to assist humanitarian demining operations. Solid information management is fundamental to HALO mine action operations – the IM/GIS Manager is the means by which HALO's operational activities are properly recorded, processed, analyzed and disseminated. The IM/GIS Manager will, after training, be expected to fully grasp the range of HALO mine action operational activities and the relevant data and information produced. The IM/GIS Manager reports directly to the Operations Manager.

**The IM/GIS Manager is responsible for:**

- Designing and maintaining scalable internal IM systems to ensure accurate and efficient collection and storage across a range of operational data.
- Manage, support and mentor the expanding IM and GIS Department.
- Management of data in HALO's Global Operations Information Management System (GO-IMS).
- Establishing a clear data flow with stated quality assurance and control mechanisms to ensure accuracy design and implementation of mobile data collection forms and data flows to assist efficient and effective field-level operations.
- Develop database reporting tools using views/queries in PostgreSQL.
- Design and maintenance of programme databases and datasets as required.
- With the Programme Officer, designing and implementing suitable Monitoring and Evaluation tools to assist the programme to understand the humanitarian impact of its operations.
- Designing and implementing training sessions in the use of physical and digital/ mobile data collection techniques.
- With Operations Management, quality control of all operational data from mine clearance, explosive ordnance risk education, explosive ordnance disposal, and other activities.
- Production of maps, infographics and other data visualization to accompany donor reports, presentations and for other external publications and uses.
- Use HALO internal data, open source, and other data with IM and GIS tools to produce of the presence and impact of mines and other explosives.
- Ensure HALO operational data is submitted accurately and on time to Information Management System for Mine Action (IMSMA), the national database owned by the National Mine Action Centre (NMAC).
- Ensure HALO monthly operational data is submitted accurately and on time to meet all reporting obligations.
- Use other platforms (e.g. Power BI) for monitoring and evaluation of HALO operations and internal data and metrics.

**Experience & qualifications**
**Essential**

- Sri Lanka citizen
- Fluent spoken and written Tamil/Sinhala.
- Excellent spoken and written English.
- Experience and knowledge of database management systems with fluency in PostgreSQL (or Microsoft SQL Server, MySQL).
- Advanced SQL and data querying/extraction skills.
- Experience in managing large datasets.
- Experience with database design of relational databases.
- Bachelor's degree in computer science, Information Systems, GIS, or related discipline. Lower level of education with relevant experience may be considered.
- Minimum three years' IM or data management experience within INGO or commercial sector.
- Excellent interpersonal and analytical skills with meticulous attention to details.
- Ability to work effectively in a team in a culturally diverse environment.
- Ability to work well under stress and in a fast-paced environment.
- Excellent time management skills and ability to multi-task and prioritize work.
- Strong organizational, planning, and problem-solving skills.
- Commitment to HALO's Values and Standards at all times, in and out of work.
- Commitment to HALO's Global and National Policies, including Safeguarding & Whistleblowing

**Desirable**

- Knowledge and experience in the use of GIS software, especially ArcGIS Pro and ArcMap.
- Experience in the use of mobile data collection tools such as Survey123, Fulcrum, Kobo.

Interested candidates must submit their CV (2 pages maximum) and a cover letter (one page maximum) to the below address or e-mail. In addition, CVs must include at least two professional references. Shortlisted candidate will be invited to interview.

All applications must be submitted no later than Friday 28 April 2023. Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

**HR Manager**
**The HALO Trust,**
**450 Thirunagar West, Kilinochchi**
**hr@halosrilanka.org**

(CR/39631)AH-1



PEOPLE'S BANK

# தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.12.2021 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 12.05.2023 (வெள்ளிக்கிழமை), 13.05.2023 (சனிக்கிழமை) ஆகிய திகதியில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாழ் ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), தெல்லிப்பளை, மல்லாகம், காங்கேசன்துறை, யாழ் பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ்.கன்னாதிட்டி, இணுவில், பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம்

**நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி :- 11.05.2023**

**ஏலவிற்பனை நடைபெறும் இடம்** :- யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை

திகதி :- 12.05.2023 (வெள்ளிக்கிழமை)
13.05.2023 (சனிக்கிழமை)

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்.**
**இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இல : 021-222 2601 / 021-222 8602**
**தொலைநகல் : 021-222 2602**
**மின்னஞ்சல் :** jafrho@peoplesbank.lk

(CR/39626)AH-1



# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
16 . 08 . 1952

மறைவு
09 . 04 . 2023

எமது கல்வி நிறுவனத்தின் இயக்குநர் **திரு.கே. பிரபாகரன்**
அவர்களின் அன்புத் தாயார்

## அமரர் கௌரி கேதீஸ்வரநாதன்

பசுமைமிகு அனலையில்
தொடர்ச்சியாய் வாழ்ந்தவர் நீர் !
அன்பையும் அறிவையும்
அரவணைப்புடன் தந்தவர் நீர் !
அவனியில் எமை தவிக்கவிட்டு
அமைதியாய் சென்றதேனோ ?
இப்புவியில் யார் நிலைத்தார்
என்று நாம் ஆறுதல் கொள்வோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

துயருறும் குடும்பத்தாருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் ஆழ்ந்த கவலையை பகிர்ந்துகொள்கின்றோம்.

**Pearson International College**
**Director and Staffs.**

(cs 24416) (N - 1) 4 x 20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயங்கி விழுந்து முதியவர் இறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12

மரண வீட்டுக்குச் சென்ற முதியவர் ஒருவர், மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் குடாவேம்படிப் பகுதியை சேர்ந்த நாகன் தேவராஜா (வயது -63) என பொலிஸார் தெரிவித்தனர். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-23)

# இலங்கையில் ரேடர் அமைக்க சீனாவை அனுமதிக்கவில்லை!

## வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 12

இலங்கையில் ரேடர் தளம் அமைப்பதற்கு சீனாவுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார். ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இலங்கையில் ரேடர் தளமொன்றை அமைப்பதற்கு சீனாவால் எந்தக் கோரிக்கையும் விடுக்கப்படவில்லை. கோரிக்கை விடுக்கப்படாத பட்சத்தில் எவ்வாறு அதை அனுமதிப்பதும் மறுப்பதும். கோரிக்கை வந்தால்கூட, அது தொடர்பில் ஆராய்ந்தே உரிய வகையில் முடிவெடுக்கப்படும்' - என்றார். (அ-ம-44)

### தமிழர்...

தமிழர் தொன்மங்களும், ஆதிசிவன் ஆலயங்களும் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றமையைக் கண்டித்து அண்மையில் சமய அமைப்புக்கள் நல்லை ஆதீனத்தில் ஒன்றுகூடி சில தீர்மானங்களை எடுத்திருந்தன. அவற்றில், ஆதிசிவன் ஆலயங்களுக்கும் அதன் தொன்மங்களுக்கும் எதிரான அழிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டுமென்றும், அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இது விடயத்தில் முன்னேற்றம் ஏற்படாத பட்சத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை (16.04.2023) தினம்முதல் சுழற்சிமுறையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தையும், கவனவீர்ப்பு நடவடிக்கையையும் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

அரசுக்கு எதிரான அவகாசம் புத்தாண்டுடன் முடிவடையும் நிலையிலும், சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் செயற்பாடுகள் கட்டுக்கடங்காமல் அதிகரித்துச் செல்கின்ற நிலையிலும் தமிழ்த் தேசிய சக்திகள், சைவசமய அமைப்புக்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், தொழிற்சங்கத்தினர், சிவில் சமூகத்தினர் இணைந்து இந்தச் சுழற்சி முறையிலான போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர்.

ஜல்லிக்கட்டுக்காக தமிழகத்தில் வெடித்த மக்கள் போராட்டத்தைப்போன்று, தமிழர் மரபுரிமையைக் காப்பதற்காக இந்தப் போராட்டம் வெடிக்கும் என்றும், அதற்குரிய முன்னாயத்த நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ம-7)

### போலி...

விற்பனை செய்யப்பட்டு வந்தவை போலியானவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூர்வாசிகள் பலர் இந்த உருத்திராட்சப் பழங்களை ஆர்வத்துடன் கொள்வனவு செய்தனர். இது தொடர்பான ஒளிப்படங்களும் சமூக வலைத்தளங்களில் அண்மையில் பகிரப்பட்டிருந்தன. இந்த நிலையிலேயே, தென்னிலங்கையில் காணப்படுகின்ற நில் வெரமு என அழைக்கப்படும் பழங்கள் உருத்திராட்சப் பழங்களைப் போலுள்ளதால் அதையே உருத்திராட்சம் என்ற பெயரில் விற்பனை செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உருத்திராட்சம் மரம் இமயமலைச் சாரலில்தான் வளரும். இலங்கையில் உருத்திராட்சம் மரம் இருப்பதாக இன்று வரையும் பதிவுகள் இல்லை என்றும் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம)

### மின் தாக்கியதில்...

இந்தச் சம்பவம் வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் நேற்று இடம்பெற்றது. உலகநாதன் கஜந்தன் (வயது - 22) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் யானைகள் மற்றும் பன்றிகளின் அச்சுறுத்தல் தொடர்ந்து வருகின்றது. இதனால், அவற்றைக் கட்டுப்படுத்தும் விதமாக மேற்படி மின்வேலி அமைக்கப்பட்டதாகவும், அதை அவதானிக்காமல் சென்றதாலேயே இந்த இறப்பு சம்பவித்துள்ளது என்றும் பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். அத்துடன், 'மின்வேலிகள் அமைப்பது இலங்கையில் பாரதூரமான குற்றம். மேற்படி இறப்புச் சம்பவிக்கக் காரணமான சட்டவிரோத மின்வேலி அமைத்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டு அவர், எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்' என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-18)

### நாணய...

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்ட அதிகாரிகளுடன் வொஷிங்டனில் தற்போது பேச்சுக்களை நடத்தி வருகின்றார்.

அதற்கமைய சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியனுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது, இலங்கையின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சி நிரல் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கான அர்ப்பணிப்பு என்பவை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார். (அ-ம)

### மதக்குழு...

ஆக்கிரமிப்புக்குள்ளான காணிக்கு முன்பாக, சிவசேனை அமைப்பின் ஏற்பாட்டில் அச்சுவேலி மக்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்துக்குச் சொந்தமான நெசவாலை அமைக்கப்பட்டிருந்த இந்தக் கட்டடம் தற்போது மதக்குழுவொன்றால் ஆக்கிரமிக்கப்பட்டு வழிபாட்டுத் தலமொன்று அமைக்கப்பட்டு அங்கு வழிபாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு எதிராக துறைசார் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த மதத் தலத்தில் வழிபாடுகளை மேற்கொள்பவர்கள் அளவுக்கதிகமான ஒலியெழுப்பியே வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். இதனால், பொதுமக்களும், நோயாளர்களும், மாணவர்களும் பல்வேறு இடர்பாடுகளைச் சந்திக்கின்றனர்.

மேற்படி மதக்குழுவின் போதகர் உட்பட மூவர் கடந்த வெள்ளிக்கிழமை வீடொன்றுக்குள் புகுந்து அங்கிருந்த பெண்களைத் தாக்கி அச்சுறுத்தியுள்ளனர். இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான செய்தியைப் பிரசுரித்தமைக்காக அவர்கள் 'உதயன்' ஊடக நிறுவனத்துக்குள் அத்துமீறி நுழைந்து ஊடக சுதந்திரத்தை நசுக்கும் விதமாகச் செயற்பட்டுள்ளனர். எனவே, சமூகத்தில் பதற்றத்தையும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்துபவர்களாகத்தான் இவர்கள் உள்ளனர். இந்த மதக்குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள வளாகத்தையும் கட்டடத்தையும் மீண்டும் அரசாங்கம் பொறுப்பெடுக்கவேண்டும் - என்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பந்தலொன்றை அமைத்துப் போராட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டபோது, அதற்கு பொலிஸார் அனுமதிக்கவில்லை. இதையடுத்துப் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே பதற்றம் உருவானது. பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தனியார் காணியொன்றுக்குள் பந்தலை அமைத்துப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் ஒளிப்படங்கள் எடுத்ததுடன், மேற்படி மதக்குழுவின் ஆலயத்துக்குள் இருந்த சிலரும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை ஒளிப்படமெடுத்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - நேற்றுமாலை ஆளுநர் அலுவலகத்தைச் சேர்ந்தோர் அவ்விடத்துக்கு வருகை தந்து, போராட்டக்காரர்களோடும், மதக்குழுவோடும் கலந்துரையாடிவிட்டுச் சென்றனர். (அ-ம-20,26)

### பால்மாவின்...

இது தொடர்பில் பால்மா இறக்குமதியாளர் சங்கத்தின் உறுப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்ததாவது:-

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை கடந்தவாரம் குறைக்கப்பட்டது. இதனால், 400 கிராம் எடைகொண்ட பால்மா பொதியொன்றின் விலை தற்போது ஆயிரத்து 120 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் பால்மாவின் விலை மேலும் குறைவடையும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார். (அ-ம)

### குடும்பத்தலைவர்...

சேர்ந்த நாகராஜா (வயது - 48) என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவராவார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கொலை இடம்பெற்ற வீட்டில் வசிக்கின்ற 20 வயதான இளைஞர் மனநல சிகிச்சைகளுக்காக கடந்த செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நேற்றுமுன்தினம் அந்த இளைஞர் மருத்துவமனையில் இருந்து தப்பி வீட்டுக்கு வந்துள்ளார். அவரை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்காக நோயாளர் பாராமரிப்பாளரை இளைஞரின் உறவினர் அழைத்து வந்துள்ளார். கொடிகாமம் ரயில் நிலைய வீதியில் அமர்ந்திருந்த மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞரோடு நலன்புரி சங்க பராமரிப்பாளர் அவரது வீட்டுக்குள் சென்றுள்ளார். இளைஞரின் உறவினர் ஓட்டோவுடன் வீதியோரத்தில் காத்திருந்துள்ளார். வீட்டுக்குள் இருந்து இளைஞர் மட்டும் வெளியே வந்து மீண்டும் ரயில் நிலைய வீதியில் அமர்ந்திருந்துள்ளார். இதனால் வீட்டுக்குள் சென்ற நோயாளர் பராமரிப்பாளரை காணாத இளைஞரின் உறவினர் அவருக்கு நீண்ட நேரமாக அலைபேசியில் அழைத்தும் பதில் இல்லாததால் மேற்படி இளைஞரிடம் கேட்டுள்ளார். இதற்கு, 'அவரை வீட்டு முற்றத்தில் வைத்து அலவாங்கால் குத்திக் கொலை செய்துவிட்டேன்' என்று இளைஞர் தெரிவித்துள்ளார். வீட்டு முற்றத்துக்குச் சென்று பார்த்தபோது குறித்த நபர் முகத்தில் பலத்த காயங்களோடு மூச்சடங்கிக் கிடந்துள்ளார். இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் இளைஞனைக் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். ஹெறோய்ன் பாவனை காரணமாகவே அவர் மனநல பாதிப்புக்குட்பட்டார் என்று மருத்துவப் பரிசோதனைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

### இளைஞர்...

உயிரிழந்தவரின் நண்பர்கள் சிலர், மயக்கமான நிலையில் அந்த இளைஞனை அவருடைய வீட்டில் விட்டுவிட்டுச் சென்றுள்ளனர். இதையடுத்து அவருடைய வீட்டார்கள் அவரைக் கொண்டு சென்று உறங்கவைத்துள்ளனர். நேற்றுக் காலை அவரைப் பார்த்தபோது மூச்சடங்கி சடலமாகக் கிடந்துள்ளார். இதையடுத்து சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இறப்பு விசாரணை களை வலிகாமம் கிழக்கு இறப்பு விசாரணை அதிகாரி ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இன்றையதினம் உடற்கூற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன் பின்னரே அவருடைய இறப்புக்கான காரணம் தொடர்பான மேலதிகத் தகவல்கள் தெரியவரும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், அவர்கள் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டூழியங்களை மறைக்க ஊடகத்துக்கு அச்சுறுத்தல்

## சமூக ஆர்வலர் கவலை

யாழ்., ஏப். 12

தாம் புரியும் சமூக அட்டூழியங்களை மூடி மறைப்பதற்காக ஊடக தர்மத்தை அச்சுறுத்தும் வகையில் 'உதயன்' பத்திரிகை அலுவலகத்துக்குள் புகுந்து மதக்கும்பல் ஒன்று அடாவடித்தனம் புரிந்துள்ளது. இது மதங்களுக்கு ஏற்படுத்தும் தலைகுனிவே என சமூக ஆர்வலரும் எழுத்தாளருமான ஓய்வு பெற்ற ஆசிரியர் கே.எஸ். சிவஞானராஜா ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

உண்மை, நேர்மை, அஞ்சாமை என்ற தாரக மந்திரத்தைக் கடைப்பிடித்து ஆதாரங்களுடன் செய்திகளை 'உதயன்' பத்திரிகை பிரசுரித்து வருகின்றது. இந்நிலையில் அச்சுவேலியில் இயங்கிய மதக்குழுவொன்று புரிந்த சமூக அட்டூழியங்களை 'உதயன்' புடம்போட்டுக் காட்டியது. அவற்றை மூடிமறைப்பதற்காக குறித்த மதக்குழு ஆட்களைத் திரட்டி வந்து அலுவலகத்துக்குள் புகுந்து அடாவடியாக அச்சுறுத்தியுள்ளது. எந்தவொரு சமயமும் வன்முறையை ஆதரிப்பதில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும்- என்றார்.

(ச-இ)


## உணவக சமையல் வெற்றிடங்கள்

யாழ். நல்லூரில் இயங்கும் உயர்தர சைவ - அசைவ உணவகத்திற்கு கீழ்காணும் உணவுகள் தயாரிக்க உயர் சமையல் வேலையாள்கள் தேவை.

உணவு - தங்கும் இட வதியுடன் சம்பளம் திறமைக்கு ஏற்பதரப்படும்

- யாழ் சோறு கறிகள்
- பிட்டு / இடியப்பம் / தோசை/ இட்டலி
- சப்பாத்தி ரொட்டி வகைகள்
- பிறைட் றைஸ் / நூடில்ஸ் / கொத்து

யாழ்பாடி, நல்லூர்.

076 652 0414

(cs 49953) (N-1) 2x8

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வழிப்பிள்ளையார் ஆலயத் திற்கு அருகாமையில் 02 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-09 வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- ✓ கைதடி சந்தியிலிருந்து 500M தூரம்
- ✓ A-09 வீதியிலிருந்து 50M தூரத்தில் காணி உள்ளது.

தொடர்பு: 076 4365 814, 076 7390 413

(CS 24428 B)A-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அச்செழுப் பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது
  2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- ✓ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ✓ நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது).
- ✓ 1 பரப்பின் விலை காப்பெற் வீதியை பிரதான முகப்பாக கொண்ட காணிகள் 15 இலட்சம்.
- ✓ 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.

பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.

தொடர்புகளுக்கு: ஜெயம்

077 8147 389

077 9865 457

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 39 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- 1 பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும் (200.000/=)
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

பார்வையிடும் நேரம் காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை

தொடர்பு:- 076 733 6047, 076 333 6079
076 733 6093

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 36 பரப்புக் காணி விற்பனைக்கு.

**நிலப்பரப்பு**

புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காப்பற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.

1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்து ஆயிரம் ரூபா மட்டும் (125.000/=)

3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து 1 1/2 KM தூரம்.

தொடர்பு: 076 755 8606
077 6385 683

(CS 24428 C)A-1


## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 08 . 1952



மறைவு 09 . 04 . 2023

### திருமதி கௌரி கேதீஸ்வரநாதன்

(அனலை வடலூர் அ.த.க.வித்தியாலய முன்னாள் ஆசிரியரும், அதிபரும்)

அனலைதீவு 2 ஆம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும் நிரந்தர வாழ்விடமாகவும், Mississauga - Canada வை சிறிது கால வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கௌரி கேதீஸ்வரநாதன் கடந்த (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அனலைதீவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராஜா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் கேதீஸ்வரநாதன் (ஜேர்மனி) அவர்களின் அன்பு மனைவியும், பிரபாகரனின் (கனடா) பாசமிகு தாயாரும், திருமதி சகிதா, திலீபன் (கொழும்பு களுபோவில - வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியும், Dr. காயத்திரி (காஷல் வைத்தியசாலை - கொழும்பு), வசீகரன் (UK), ஜனார்த்தனன் (UK) ஆகியோரின் பெரியதாயும், ஸ்ரீனிகா, ஹறினிஸா, அஸ்மிதா, காவியா, அபிநயன் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும், திருமதி கௌசலா அவர்களின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற வைத்தீஸ்வரமூர்த்தி மற்றும் இராஜேஸ்வரன், காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் திருமதி சுந்தரேஸ்வரி வெற்றிவேல், காலஞ்சென்ற ஞானேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும், திரு. திருமதி உதயகுமாரன் இலக்கினேஸ்வரி ஆகியோரின் சம்புந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2023) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் அனலைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சக உத்தியோகஸ் தர்கள் மற்றும் பழைய மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

+ 1 416 938 3768
+ 94 77412 9928

தகவல்:
மகன் - பிரபா கேதீஸ்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 . 01 . 1944



மறைவு 24 . 03 . 2022

### திரு. நடராசா இராசநாயகம்

(ஓய்வுபெற்ற படவரைஞர் புகையிரத திணைக்களம்)

திதி: தேபிறை ஷஷ்தமி

எங்கள் நல்வாழ்விற்கு கலங்கரை
விளக்காக நின்று வழிகாட்டிய
அன்புத் தந்தையே!
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
உங்கள் பாச நினைவுகள் என்றும்
எங்களுடன் இருக்கும்.

லீல கிரி
காளிகோவிலடி, கோப்பாய்.

அன்புச் செல்வங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 483 0000 - விளம்பரம் : 021-483 1111
விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12. 04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.